JESUS REDEEMS MINISTRIES

# ஜாஸிபர் உலகம்

மலர்: 12| இதழ்: 9 | நவம்பர் 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-



## யெகோவா கெமுலா

தாவீது மனந்திரும்பியதால் ஆண்டவர் தாவீதை அழிக்காமல்
அவருடைய பட்டயத்தை தாவீதின் குடும்பத்தின் மேல் திருப்பினார்.



யெகோவா கெமுலா என்பதற்கு **சரிகட்டுதல்**
(திருப்பி செலுத்துவது) என்று அர்த்தம்

சரிகட்டும் தேவன்! 6

8 புதிதான இருதயம்

ஆபிரகாமை அழைத்த தேவன்... 12

22 இனிமையான வெற்றி பயணம்!

சரியா? தவறா? 28

30,000 வாலிபர்கள் கையில் தவழும்

வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

தலைவாசல்

# நீதியை நிலை நாட்டுவார்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

இஸ்ரவேல் ஜனம் தேவனுடைய சொந்த ஜனம். அவர்களை தேவன், தன் சொந்த ஜனம் என்று கூறுவார். ஆனால் எப்பொழுதெல்லாம் இஸ்ரவேல் ஜனம் பாவம் செய்கிறதோ, அப்பொழுதெல்லாம் ஒரு அந்நிய ராஜாவை ஏற்படுத்தி, அந்த எதிரி ராஜா மூலம் இஸ்ரவேலுக்கு பாடம் புகட்டுவார். அப்படி தேவன் அசீரியா ராஜாவைக் கொண்டு நீதி செய்தார். தேவன் அசீரியா தேசத்தை பயன்படுத்தி பிற நாடுகளில் கொள்ளையிடவும், அடிமைப்படுத்தி, சிறைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகப்படவும் இடம் கொடுத்தார். அப்படி பலமுறை அசீரியா ராஜா எருசலேமை கொள்ளையடிக்கவும், சூறையாடவும் ஒப்புக் கொடுத்தார்.



ஆனால் அசீரியா ராஜா, அது தன்னுடைய பெலன் என்றும், தன்னுடைய ராணுவத்தின் பெலன் என்றும் பெருமை பாராட்டி தேவனை துதிக்கவோ அல்லது தேவனை உயர்த்தவோ மறந்து போனான். எனவே எந்த அசீரியா தேசத்தை தேவன் ஒரு ஆயுதமாக பயன்படுத்தினாரோ, அதே அசீரியா தேசத்தை அவன் பெருமையின் நிமித்தம், அவனுக்கு பதில் செய்வேன் என்று அசீரியாவுக்கு பதில் செய்தார்.

ஏசாயா 10:5-18ம் வசனங்களில், அசீரியாவின் மீது தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார். அவன் பெருமையாய், மகிமையாய் எண்ணின சகல ஆசீர்வாதத்தையும் ஒரே நாளில் அழியப் பண்ணினார். காட்டில் அவனுக்கு மீதியான மரங்களை, ஒரு சிறுபிள்ளை எண்ணுவான், அப்படியாக அவனை சங்கரிப்பேன் என்று தேவன் அசீரியனுக்கு சரிகட்டினார்.

இன்றைக்கு தேசத்தை சரியாக, நியாயமாக ஆள வேண்டும் என்பதற்காக தேவன் ஆளுகையில் ஆட்களை வைத்துள்ளார். ஒருவேளை அதிகாரம் என் கையிலே என்று ஏழைகளை ஒடுக்கி, அவர்களுக்கு துரோகம் செய்யும்போது, 'யெகோவா கொமுலா' [சரிகட்டும் தேவன்] அவர்களுடைய கைகளுக்கு தக்கதாக செய்வார்.



அநேகர் கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் உண்மையாக இல்லாமல் அதிகாரத்தை துஸ்பிரயோகப்படுத்தும் போது, 'யெகோவா கொமுலா' [சரிகட்டுகிற தேவன்] தலையிட்டு காரியங்களை சீர்படுத்துவார் ●

இன்றைக்கு உனக்கு ஒரு தேவன் உண்டு,
அவர் உனக்கு நியாயம் செய்வார்!
நீதியை நிலைநாட்ட நிச்சயம் நீதி செய்வார்!

கிறிஸ்துவின் பணியில்

அவினாஷ்



# கோபம்

**Heart Beat**

நான் சிறுவயதிலிருந்தே அதிகமாகக் கோபப்படுவேன். அது நாளடைவில் என்னுடைய குணாதிசயமாகவே மாறிவிட்டது. என்னால் என் கோபத்தை அடக்க முடியாமல், எல்லோரையும் திட்டி விடுவேன். இன்னும் சில நேரங்களில் கோபத்தை அடக்க முடியாமல் எதிரில் இருப்பவர்களை அடித்தும் விடுகிறேன். இந்தக் கோபம் பல காலமாய் என்னை பாதித்துக் கொண்டே இருக்கிறது. அதிகமாக கோபம் வரும்போது, அந்தக் கோபத்தை அடக்க முயற்சித்தால் தாங்க முடியாத தலைவலி வந்து விடுகிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. மேலும் தற்பொழுது என்னுடைய மகனும் என்னைப் போலவே கோபப்படுகிறான். அவனும் என்னைப் போலவே பல்லைக் கடித்துக் கொண்டே பேசுகிறான். என்னைப் போல என் மகனும் பாதிக்கப்பட்டு விட்டான் என்ற வருத்தமும், என்னால் தான் என் மகனுக்கும் இந்த சுபாவம் வந்து விட்டதே என்ற துக்கமும் என்னை மிகவும் வருத்துகிறது. ஆனால் இயேசு விடுதலை தருவார் என்று அறிந்து தற்பொழுது ஜெபித்தும், உபவாசித்தும் வருகிறேன். எனக்கு விடுதலை கிடைக்குமா? நான் ஒரு இயல்பு நிலை வாழ, எனக்கு உதவி செய்யுங்கள்.

– ராகுல், கும்பகோணம்

அன்பு சகோதரர் ராகுல்! உங்களுடைய பிரச்சனை எனக்கு நன்கு புரிகிறது. உங்களுடைய கோபம் உங்களை மட்டுமல்லாமல் உங்களை சுற்றி உள்ளவர்களையும் பாதிக்கின்றது. அதேநேரம் தற்போது அது உங்களுடைய மகனையும் பாதித்து விட்டதே என்று நீங்கள் வருந்துவது நன்கு புரிகிறது.



ராகுல்! கோபம் என்பது ஒருவிதமான உணர்வு, கோபம் எதை வெளிப்படுத்துகிறது என்றால், உங்களுக்கு உள்ளே ஏதோ ஒரு போராட்டம் அல்லது பிரச்சனை இருக்கிறது. எனவே அதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அதின் அர்த்தம். எடுத்துக்காட்டாக நீங்கள் நேசிக்கும் நண்பர் எல்லோர் முன்னிலையில் உங்களை கிண்டல் செய்தால், நீங்கள் கோபப்படுவீர்கள். ஆனால் நீங்கள் அந்த இடத்தில் அது ஒருவிதமான துரோகம் அல்லது தன்னைக் காயப்படுத்தியதுப் போன்று உணர்வீர்கள். ஆனால் அந்த காயப்பட்ட உணர்வை வெளிப்படுத்தாமல் கோபமான வார்த்தையையோ அல்லது செய்கையையோ வெளிப்படுத்துவீர்கள்.

ராகுல்! நீங்கள் ஆசைபடுவது போல இந்தக் கோபத்திலிருந்து வெளியே வர வாய்ப்பு உண்டு. உங்களுக்கு விடுதலையும் உண்டு. அதற்கு நீங்கள் சில விதிமுறைகளை கைக்கொண்டால் முற்றிலும் வெளியே வர முடியும். மனம் சோர்ந்து போக வேண்டாம்.

## நீங்கள் எந்த சூழலில் கோபப்படுகிறீர்கள் என்று யோசியுங்கள்



× சிலருக்கு சுத்தமாக வீட்டை வைத்துக் கொள்ளாவிட்டால் கோபம் வரும்.

× தன்னை தரக்குறைவாய் பேசி விட்டால் கோபம் வரும்.

× செய்யாத குற்றத்தைச் செய்தீர்கள் என்று பழி சொல்லும் போது கோபம் வரும்.

× சொன்ன வேலையை உடனே செய்யாவிட்டால் கோபம் வரும்.

×சிலருக்கு சத்தமாக பேசுவதே பிடிக்காது.

× சிலருக்கு குறைக் கூறிக்கொண்டே இருந்தால் பிடிக்காது.

× கொடுத்த பொறுப்பை தட்டிக் கழித்துக் கொண்டே இருந்தால் பிடிக்காது.

× ஒரு குழுவாக இருக்கும் போது, ஒத்துழைக்காமல் தனியே செயல்படுவது.

× நம்மை நம்பாமல் இருந்தால் கோபம் வரும்.

× அடிக்கடி கேள்விக் கேட்டுக் கொண்டே இருந்தால் பிடிக்காது.

இப்படிப் பலக் காரியங்களினால் சிலருக்கு கோபம் வர வாய்ப்பு உண்டு. உங்களுக்கு எப்பொழுது கோபம் வருகிறது? ஏன் வருகிறது? என்று யோசித்து ஒரு தாளில் எழுதுங்கள். எப்பொழுதெல்லாம் உங்களால் அந்த கோபத்தை அடக்க முடிகிறது, எப்பொழுதெல்லாம் அடக்க முடியவில்லை, அடக்க முடியாமல் போவதால் ஏற்படும் பின்விளைவுகள் எவை என்பதையும் பட்டியலிடுங்கள்.



### கோபப்படுவதால் ஏற்படும் விளைவுகள்

× உங்களுடைய சரீரம் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. (உங்களின் இரத்த அழுத்தம், செரிமான காரியம், இருதய அமைப்பு போன்றவைகள்)

× மேலும் சுற்றத்தார் உங்களை விட்டு பிரிந்து விலகி நிற்க வாய்ப்பு உண்டு.

× உங்கள் சொந்த குடும்பத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்படலாம். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அன்பு கிடைக்காததால், நீங்கள் அன்பாக பேசாததால் அவர்கள் மனதில் ஒருவிதமான வெறுப்பும், பயமும் உண்டாகி, உங்களை விட்டுப் பிரிந்து போகவும் வாய்ப்பு உண்டு.

### கோபத்தை மேற்கொள்ள சில வழிமுறைகள்

**1. உடற்பயிற்சி (Exercise)**

உடற்பயிற்சி செய்யும் போது உங்களுடைய அழுத்தத்தையும், கவலையையும், சோர்வையும் வெளியேற்ற வாய்ப்பு உண்டு. நீங்கள் 30 நிமிடம் உடற்பயிற்சி அல்லது ஒரு ஓட்டம் ஓடுவது அல்லது நடைபயணம் செய்யும் போது அது கோபத்தின் தன்மை உச்சத்தில் எட்டாதவாறு அவற்றை அடக்கிப் போடுகிறது.



**2. வெளியே சென்று நேரத்தைக் கழிப்பது (Time Out)**

வெளியே சென்று இயற்கை சூழ்நிலைகளை பார்க்கும் போது, பசுமையான பச்சை மரங்களை பார்க்கும் போது, ஒரு அமைதி உண்டாக வாய்ப்பு உண்டு. அவை நம்முடைய கோபத்தை உண்டாக்கும் சூழ்நிலையை சற்று நேரம் மறக்கப்பண்ணலாம். (கோபப்படும்போது அந்த இடத்திலிருந்து உடனே வெளியே வருவது பாதி பிரச்சனையை குறைத்து விடும்)

### கவனம் செலுத்த வேண்டியது

**விழிப்புணர்வு (Self Awareness)**

விழிப்புணர்வு என்பது உங்களுடைய கோபத்தைக் குறைக்கும் ஒரு நல்ல ஆயுதம் என்றும் சொல்லலாம். விழிப்பாக இருப்பது என்பது நீங்கள் என்ன யோசனையில் உள்ளீர்கள், பிரச்சனைகள் வரும்போது எப்படி சமாளிக்கிறீர்கள் போன்றவற்றை மிக துல்லியமாக அறிந்து அதற்கேற்ப செயல்படுவது.

### கோபமாக இருக்கும் போது, தவிர்க்க வேண்டியது




Phone call, மனிதர்கள், வேலைகள் இவற்றை நாம் தவிர்க்கும் போது அது உங்களுடைய கோபத்தைத் தணிக்க உதவும். அந்த விழிப்புணர்வு உங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

ராகுல்! மேலும் இப்படிப்பட்ட விதிமுறைகளை கடைபிடிக்கும் போது, உங்களின் கோபத்தை ஞானமாய் கையாளவும், உங்களது உடல் நலம் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளவும் முடியும். மேலும் உங்களிடம் காணப்படும் மாற்றம், கண்டிப்பாக உங்கள் மகனின் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்கும். நீங்கள் பின்பற்றாத காரியத்தை உங்கள் மகனுக்கு சொல்ல முடியாது.

**எனவே மேலே குறிபிட்டுள்ள அறிவுரைகளை நீங்கள் பின்பற்றும் போது உங்கள் கோபத்தை கட்டுப்படுத்த முடியும். மேலும் உங்கள் விசுவாசமுள்ள ஜெபம் ஒரு நாளும் வீண் போகாது. கர்த்தர் நிச்சயம் உங்களுக்கு அற்புதம் செய்வார்! ●**



# சரிகட்டும் தேவன்!

***பரந்து விரிந்த இந்த உலகத்தில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் குற்றமே செய்திராத மனிதனைப் பொறுக்கி எடுப்பது அரிதான ஒன்று. குற்றம் செய்வது இயற்கை. தான் செய்த தவறை உணர்ந்து வாழும் மனிதன் தேவனுடைய கண்களில் இரக்கம் பெறுகிறான். அதே சமயத்தில் தேவ நீதியும் தவறு செய்யும் மனிதனுடைய வாழ்க்கையில் வெளிப்படுகிறது. ''நீதி'' என்பது நெறிமுறை தவறாமல் நேர்மையாக நடக்கும் நிலையைக் குறிக்கிறது.***



பாவம் செய்யாமல் இருப்பவன் நீதிமான் என்ற பொதுவான கருத்து மனிதர்களிடையே நிலவி வருகிறது. நன்மை தீமை அறிந்த எந்த மனிதனும் தன்னுடைய வாழ்வில் நன்மையை மட்டும் செய்வதில்லை. பாவமும் கூடவே இருக்கத்தான் செய்கிறது. பாவம் செய்யாத ஒரு மனிதனும் இல்லை என்பதால், **''நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை'' (ரோமர் 3:10,12)** என்று வேதம் சொல்கிறது.

கர்த்தருடைய இருதயத்திற்கு பிரியமான தாவீது இராஜாவான பின்பு, ஒரு நாள் சாயங்கால வேளையில் அரண்மனை உப்பரிக்கையில் நின்று ஒரு பெண்ணைக் கண்டு அவளை அழைத்து வரச் சொல்லி அவளோடு பாவம் செய்தார். தான் செய்த பாவத்தை மறைப்பதற்காக அவளுடைய கணவனாகிய உரியாவை இராணுவத்திலிருந்து வரவழைத்து அவன் வீட்டிற்கு அனுப்புகிறார். ஆனால் உரியாவோ அரண்மனையிலேயே தங்கி விடுகிறான். இதை அறிந்த தாவீது தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு உரியாவை மீண்டும் இராணுவத்திற்கு அனுப்பி யுத்தம் மும்முரமாக நடக்கும் இடத்தில் முன்னணியில் உரியாவை நிறுத்தி அவனை விட்டு மற்றவர்களைப் பின்வாங்க வைத்து, யுத்தத்தில் யதார்த்தமாய் உரியா செத்தது போல ஒரு படுகொலையை நடத்தி, அவன் செத்த பின்னர் அவன் மனைவியை தாவீது தனக்கு மனைவியாக்கிக் கொண்டார். தாவீது தான் செய்த இந்தப் பாவத்தை மனிதர்களுக்கு முன்பாக மறைத்திருக்கலாம். ஆனால் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக மறைக்க முடியவில்லை. **''...தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது'' (2 சாமு. 11:27).**





நீதியுள்ள தேவனாகிய ஆண்டவர் தாவீது செய்த விபச்சார கொலை குற்றத்திற்கு தண்டனைக் கொடுத்தாரா? அல்லது தாவீது இராஜா மன்றாடி மன்னிப்பு கேட்டதற்கு இரக்கமுள்ள தேவன் தாவீது செய்த பாவத்தை மன்னித்து விட்டு விட்டாரா? பழைய ஏற்பாட்டின்படி கொலை செய்தவன் கொல்லப்பட வேண்டும், அதுதான்

நீதி. ஆனால் நாத்தான் தீர்க்கதரிசி மூலம் ஆண்டவர் தன்னுடைய பாவத்தை உணர்த்திய போது தாவீது அதை உணர்ந்து, ''நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன்'' என்று மனந்திரும்பி அறிக்கையிட்டதினால் தேவன் தாவீதிற்கு மரணதண்டனை விதிக்காமல் ஆயுள் தண்டனை கொடுத்தார். அது என்ன மரண தண்டனை, ஆயுள் தண்டனை என்று தானே யோசிக்கிறீர்கள்? தாவீது மனந்திரும்பியவுடன் நாத்தான் தாவீதை நோக்கி, **''...நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்'' (2 சாமு. 12:13).** ஒரு வேளை தாவீது மனந்திரும்பாமல் இருந்திருந்தால் நீதியுள்ள தேவனாகிய கர்த்தர் உரியாவின் படுகொலைக்குத் தக்கதாக தாவீதை கொலை பழிக்கு ஆளாக்கி இருப்பார். தாவீது மனந்திரும்பியதால் ஆண்டவர் தாவீதை அழிக்காமல் அவருடைய பட்டயத்தை தாவீதின் குடும்பத்தின் மேல் திருப்பினார். பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் என்பது தான் ஆயுள் தண்டனை. இந்தத் தண்டனை உடனே தாவீதுடைய வாழ்க்கையில் நிறைவேறுகிறதைப் பார்க்கலாம். ஆண்டவர் சொன்னபடியே பட்டயம் தாவீது குடும்பத்திற்குள் கிரியை செய்கிறது, பிள்ளைகளுக்குள் சண்டை உருவாகிறது, தாவீதுடைய மகனே அவருக்கு விரோதமாய் எழும்ப, தாவீது ராஜாவாக இருந்த போதும் அரண்மனையை விட்டு வெளியேறுவதெல்லாம் நடக்கிறது.





இன்றைக்கும் அநேக வாலிபர்கள் மன்னிக்கிற இரக்கமுள்ள ஆண்டவர் பாவம் செய்தாலும், மன்னித்து விடுதலை தருவார் என்று தவறாக நினைத்து பயமில்லாமல் பாவம் செய்து வாழ்கிறார்கள். தான் செய்த பாவத்தை அநேக தரம் உணர்த்தியும் ஆண்டவரை அசட்டை செய்த பாவத்திற்கு தாவீதுக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. ஆண்டவர் ஒரு பக்கம் நம்முடைய பாவங்களை மன்னித்து இரக்கம் காட்டுவார். அதே சமயத்தில் செய்த பாவத்திற்கு தண்டனைக் கொடுத்து நீதியை சரிகட்டுகிற தேவனாக இருப்பார் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

என்னுடைய வாழ்க்கையில் நான் பரிசுத்தமாக இருக்கிறேன், உண்மையாய் இருக்கிறேன். ஆனால் எனக்கு மட்டும் வாழ்க்கையில் போராட்டம், சஞ்சலம், நிந்தனைகள், அவமானங்கள், ஏளனமான பேச்சுகள் வருகிறதே என்று நீங்கள் மனுஷனுடைய வார்த்தைகளின் நிமித்தம் சோர்ந்து போய் இருக்கிறீர்களா? கலங்காதீர்கள். தாவீதின் வாழ்க்கையில் **''சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ'' (2 சாமு. 16:7)** என்று தூஷித்தான். தாவீதின் மேலும், அவனுடைய ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தான். இதைப் பார்த்து கோபங்கொண்ட அபிசாய், **''அந்தச் செத்த நாய் தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமா? என்றான்'' (2 சாமு.16:9).** அப்போது தாவீது சொன்ன பதில் என்ன தெரியுமா? **''...அவன் தூஷிக்கட்டும் அவன் அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்'' (2 சாமு. 16:11,12).** தாவீதின் பொறுமையையும் அவன் வாயின் வார்த்தைகளையும் கர்த்தர் கனப்படுத்தினார். தாவீது சொன்னபடியே அவன் இராஜாவாக திரும்ப வரும்போது, சீமேயி இராஜாவாகிய தாவீதை நோக்கி, என் ஆண்டவர் என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமலும், இராஜாவாகிய என் ஆண்டவர் எருசலேமிலிருந்து புறப்பட்டு வருகிற நாளிலே, உமது அடியான் செய்த துரோகத்தை இராஜா நினைக்காமலும் தமது மனதில் வைக்காமலும் இருப்பாராக என்றான். இப்படி தாவீதை தூஷித்த சீமேயி தாவீதிடம் வந்து தாழ பணிந்தது போல உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் பொறுமையாக இருந்து தேவன் எனக்கு நீதி செய்வார் என்று விசுவாசித்தால், **''...சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர் நிச்சயமாகப் பதில் அளிப்பார்'' (எரே. 51:56)** என்பதில் சந்தேகம் இல்லை.

எனக்கன்பான வாலிபர்களே! நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். நாம் செய்யும் ஒவ்வொரு பாவத்திற்கு தக்க தண்டனை கிடைக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். அதே சமயம் எனக்காக வழக்காடவும், பரிந்து பேசவும், நீதி செய்யவும் ஒருவரும் இல்லை என்று சோர்ந்து போகாதீர்கள். ''நீதியின் தேவனாகிய கர்த்தர்'' நிச்சயமாகவே உங்களுக்காக சரிகட்டும் தேவனாக (யெகோவா கெமுலா) இருப்பார் ●



# புதிதான இருதயம்!



**அறுவை சிகிச்சை என்றாலே பயப்படக்கூடிய விஷயம். அதிலும் கை, கால் என்றால் கூட கொஞ்சம் தைரியமாக இருக்கலாம். இருதய அறுவை சிகிச்சையா? அதுவும் பல முறையா? பிறந்த 3 மாதத்திற்குள்ளே இருதய அறுவை சிகிச்சை செய்தார்களா? இப்படி எனக்கு பல கேள்விகள் வந்தது. என்னுடைய தோழியான கிரேஸின் வாழ்வில் நடந்த அற்புதங்களையும், சவால்களையும் உங்களுக்காக தொகுத்து வழங்குகிறேன். மலேசியா தேசத்தில் வசிக்கும் கிரேஸ் உடன் நடந்த உரையாடல், இதோ உங்களுக்காக...**

### உங்கள் குழந்தைப் பருவம் பற்றி சொல்றீங்களா?

ஹாய் ஜிஷ்யா, பல நாட்களுக்குப் பிறகு உங்களோடு தொடர்பு கொள்வது மிகவும் சந்தோஷம். நான் மலேசியா தேசத்தில் பிறந்தேன். எனக்கு ஒரு அண்ணா இருக்கிறார்கள். நான் பிறக்கும் வரை அப்பா, அம்மா மலேசியாவில் வேலை செய்துக் கொண்டிருந் தார்கள். நான் பிறந்த பிறகு அம்மா என்னை பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதால் வேலையை விட்டு விட்டார்கள். மற்றவர் களுடைய குழந்தைப் பருவம் போல் என்னுடைய குழந்தைப் பருவம் இல்லை. நான் பிறந்த சில வாரங்களிலேயே, என்னுடைய இருதயம் சரியாக வேலை செய்யவில்லை என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள்.



### அப்படி என்ன நடந்தது? இருதயத்தில் என்ன மருத்துவ சிக்கல் இருந்தது?

பிறந்த மூன்றாவது வாரம் என்னை பரிசோதித்த மருத்துவர்கள், ''எனக்கு சிக்கலான இருதய நிலைமை இருப்பதாகவும் (Complex Heart Condition), வலது பக்கம் இருக்க வேண்டிய இரத்தக்குழாய் (Artery) இடது புறத்திலும், இடது பக்கம் இருக்க வேண்டிய இரத்தக்குழாய் வலது பக்கத்திலும் இருந்தது.'' எனவே இரத்த ஓட்டம் சரியாக இல்லை. அதுவும் மாறாக செயல்பட்டது (Other way round). இதில் மிக பெரிய அற்புதம் என்னவென்றால், 3 வாரங்கள் நான் எப்படி உயிரோடு இருந்தேன் என்பதே மருத்துவர்களுக்கு புரியவில்லை. பல அறுவை சிகிச்சைகளின் வழியே சென்றிருக்கிறேன். பலநாட்கள்மருத்துவமனையிலேயே இருந்திருக்கிறேன்.

### பிறந்த சில வாரங்களிலேயே இருதய அறுவை சிகிச்சையா? யோசிக்கவே முடியல... சரி அதற்கு பிறகு சரீரத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லையா?

எனக்கு 10 வயதாக இருந்தபோது, இருதயத்தில் Pacemaker பொருத்தப் பட்டது. 20 ஆண்டுகளாக Pacemaker பொருத்தப்பட்ட இருதயத்தோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன். அந்த நாட்களில் மலேசியாவில் நாங்கள் இருந்தப் பகுதியில் இப்படிப்பட்ட அறுவை சிகிச் சைக்கான வசதிகள் இல்லை. எனவே பிறந்த 3 வாரத்தில் இருந்து 1½ வயதாகும் வரை மருத்துவமனையிலேயே என்னை வைத்து, அதன் பிறகு தான் Open heart Surgery செய்தார்கள். இப்படிப்பட்ட கடினமான (Complex) இருதய அறுவை சிகிச்சை எனக்கு தான் முதல் முறையாக Kuala Lumpur-யில் நடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருத்துவர்கள் என் பெற்றோர்களிடம் நான் உயிர் பிழைக்க 10% வாய்ப்பே இருப்பதாகவும், அப்படியே உயிர் பிழைத்தாலும் 'நடக்க முடியாது' சரீரம் செயல் இழந்த நிலையில் காணப்படும் என்பதே அவர்களுடைய கணிப்பாக இருந்தது. இவையெல்லாம் தாண்டி அவள் உயிர் பிழைத்தால்கூட இருதயம் பெலவீனமாய் இருப்பதால், மூளைப் பகுதிக்கு (Brain) செல்ல வேண்டிய பிராணவாயு (Oxygen) அளவு குறைந்து விடும். எனவே மெதுவாக தான் படிக்க முடியும் (Slow Learner). படிப்பது மிகவும் கடினம் என்றும் சொல்லி விட்டார்கள். இப்படி பல விஷயங்களை சொல்லிக் கொண்டே போகலாம். மறுபடியும் இருதயம் சரியாக வேலை செய்ய வில்லை, மருத்துவ பரிசோதனை களுக்கு பிறகு Pacemaker பொருத்தப் பட்டது. சொல்லப்போனால் சிறுபிரயாம் முழுவதுமே மருத்துவமனை, மருத்து வர்கள், சிகிச்சை இப்படியே போய் விட்டது.





## கேட்கவே மிகவும் கஷ்டமாக இருக்கு. சரீர ரீதியாக கஷ்டப்பட்டீர்கள்... மனதளவில் இது உங்களை எப்படி பாதித்தது?

மற்ற பிள்ளைகளைப் போல ஓடவோ, விளையாடவோ முடியாது. ஆனால் என்னால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்தேன். சோர்ந்து போன நேரங்களில் அம்மா, தேவனுடைய வார்த்தைகளைச் சொல்லி உற்சாகப்படுத்தினார்கள். 'ஏன் எனக்கு மட்டும்! என்ன நடக்குது எனக்கு? நான் ஏன் மருத்துவமனையிலேயே இருக்கி றேன்? இப்படி கேள்விகள் எழும்பும் அடுத்த வினாடியே அம்மா என்னை உற்சாகப்படுத்தும் விதமாக பேசு வார்கள். சுயபரிதாபத்திற்குள் நான் போகவில்லை. என்னால் முடிந்த வற்றை எல்லாம் முழு பெலத்தோடு, சிறப்பாக செய்தேன். உடற்பயிற்சிக்கு போக முடிய வில்லை போகமுடியாது. மலை ஏறுதல் (Hiking) போன்ற வைகளை எல்லாம் என்னால் செய்யமுடியாது என்பது கொஞ்ச கஷ்டமாக இருந்தாலும், எவ்வளவோ விஷயங்கள் செய்ய முடிகிறதே என்று எண்ணி தேவனை துதிக்கிறேன்.



## இவ்வளவு தைரியமாக நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், உங்கள் அம்மாவின் ஜெபம் மற்றும் உற்சாகப் படுத்தக்கூடிய வார்த்தைகள் தான் உங்களை இப்படி பெலப்படுத்தியிருக்கிறது, அம்மா பற்றி சொல்லுங்களேன்?

அம்மா நன்றாக ஜெபிப்பார்கள். மருத்துவ மனையில் நான் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில்கூட மற்றவர்களிடம் 'இயேசு நல்லவர்' என்று சொல்வார்கள். ஒருமுறை இருதய அறுவை சிகிச்சைக்கு முன், நான் அம்மாவிடம் கேட்டேன், 'ஒருவேளை இந்தச் சிகிச்சையில் நான் உயிர் இழந்தால், தேவன் நல்லவர்' என்று சொல்வீர்களா? என்று கேட்டேன். அதற்கு அம்மா, ''நான் உன்னை இழப்பதால் தேவனுடைய குணம் மாறப் போவதில்லையே! அவர் நல்லவர் தானே!'' என்று கூறினார்கள். இந்த நம்பிக்கைதான், இயேசுவை அவர்கள் நேசித்தது, எல்லா சூழ்நிலையிலும் அவரை விசுவாசித்தது இவையெல்லாம் என்னை பெலப்படுத்தியது. Surgery முடிந்து சுயநினைவிற்கு திரும்பும் போது, ''அம்மா உன்னை நேசிக்கிறேன்'', ''அப்பா உன்னை நேசிக்கிறேன்'', ''தேவன் உன்னை நேசிக்கிறார்'' என்று சொல்வது கேட்கும். என்னால் பேச முடியாது, சுயநினைவு இருக்காது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் என்னால் அவர்கள் சொல்வதை உணர முடியும். குடும்பமே எனக்கு ஆதரவாக இருந்தது. இயேசுவின் அன்பை அதிகமாக புரிந்துக் கொண்டேன்.

## கண் கலங்க வைச்சிட்டீங்க. அப்பா, அம்மா, அண்ணாவிற்கு பெரிய Salute. சரி, உங்களால் படிக்க முடிந்ததா?

படித்தேன்... பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு எல்லாவற்றையும் மற்ற மாணவர்களைப் போல படித்தேன். நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சியும் பெற்றேன். தேவன் எனக்கு நல்ல தோழிகளையும் கொடுத்தார். சிலர் என் பெலவீனத்தைச் சொல்லி விலகியிருக்கிறார்கள், காயப்படுத்தியும் இருக் கிறார்கள் ஆனால் 'உன்னை நேசிக்க பலர் இருக்காங்க, அவர்களோடு நண்பர்களாக இருந்துக்கோ' என்று அம்மா சொல்வார்கள். தேவனிடம் என் எதிர்காலத்தைப் பற்றி







கேட்கும்போது, தேவனிடம் என் கஷ்டத்தைச் சொல்லி அழும்போது, ''நான் உனக்காக நல்ல திட்டத்தை வைத்திருக்கிறேன்'' என்று சொல்லி உற்சாகப்படுத்துவார்.

### எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறீங்க... நீங்கள் மறக்க முடியாத தருணத்தைப் பற்றி சொல்றீங்களா?

ஆண்டவரை முழுமையாக நம்புவது என்றால் என்ன என்பதை கற்றுக் கொண்டே இருக்கிறேன். மறக்க முடியாத சம்பவம்... ஹம் சொல்றேன். எனக்கு 18 வயதாக இருந்த போது, பள்ளிப் படிப்பை முடித்து விட்டு சில கனவுகளோடு காத்துக் கொண்டிருந்தேன். திடீரென பலவீனமாகி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவர், Pacemaker Battery பளுதாகிவிட்டதால், மாற்ற வேண்டும் எனவே, உடனே அறுவை சிகிச்சைக்கும் சென்றேன். சிறுவயதில் அறுவை சிகிச்சை பெரிதாக தெரியவில்லை. Teenage-யில் கஷ்டமாக இருந்தது. எனினும் தேவன் பெலப்படுத்தினார். இந்த ஆண்டும் ஒரு இருதய அறுவை சிகிச்சை செய்தார்கள். எதுவும் தேவனுக்காக நான் ஓடும் ஓட்டத்தைத் தடை செய்யவில்லை.



> சிறுவயதில் அறுவை சிகிச்சை பெரிதாக தெரியவில்லை. Teenage-யில் கஷ்டமாக இருந்தது. எனினும் தேவன் பெலப்படுத்தினார்.

### சூப்பர் கிரேஸ்... நீங்கள் இப்பொழுது என்னவெல்லாம் செய்துக் கொண்டிருக்கிறீர்கள்?

மலேசியாவிலுள்ள பிரபலமான சபையில் ஊழியம் செய்கிறேன். வாலிபர்கள், சிறுவர்கள், இளம் வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்கிறேன். சமூக வலைத்தளங் களின் மூலமாகவும் தேவனுடைய அன்பை அறிவிக்கிறேன். குறிப்பாக என்னைபோல் பெலவீனத்திலுள்ள குழந்தைகளின் பெற்றோர்களிடம், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கும் தேவனுடைய அன்பையும் என் சாட்சியின் மூலமாக அறிவிக்கிறேன்.

### சூப்பர்... இதை வாசிக்கும் வாலிபர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

எனக்கு மட்டும் தான் இந்தக் கஷ்டமான வாழ்க்கை என்று புலம்பாமல், எண்ணாமல், தேவன் உங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை எண்ணி அவருக்கு நன்றி சொல்லுங்கள். உங்களால் முடிந்தவற்றை சிறப்பாக தேவனுக்கு செய்யுங்கள். தேவன் நல்லவர் என்பதை மறவாதீர்கள்.

அன்பான வாலிபர்களே! கஷ்டங்கள், பெலவீனங்கள், மரண இருளின் பள்ளத்தாக்குகள், கிரேஸின் ஓட்டத்தை நிறுத்தவில்லை. இன்றும் தேவனுக்காக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ***Grace Jerald*** ஐ வழி நடத்தும் தேவன் உங்களையும் இறுதி வரை நடத்துவார் என்பதை மறவாதீர்கள் ●

# REVIVAL iGNITERS

**EVERY 1ST SUNDAY**
(4th November)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center,
9442885315

**EVERY 2ND SATURDAY**
(13th November)

MADURAI (4:30 - 6:30PM)
Gethsamane Prayer Centre
9750955548 | 0452-2677300

**EVERY 2ND SUNDAY**
(14th November)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre,
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Gethsemane Prayer Centre,
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM - 6 PM)**
St. Paul's Matriculation School,
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
9750955548 | 9976766422

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

**EVERY 3RD SUNDAY**
(21st November)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
9488475315

**JEBAMALAI (2PM)**
Keelamathapuram,
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre,
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School,
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsemane Prayer Center,
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound,
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
9500283179 | 9442885315

**EVERY 4TH SATURDAY**
(27th November)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
9788788512

**EVERY 4TH SUNDAY**
(28th November)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower,
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsemane Prayer Center,
9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center,
9442885315

செய்தி சகோ.மோகன் சி.லாசரஸ்

# ஆபிரகாமை அழைத்த தேவன்...



ஆபிரகாமே உன்னுடைய சொந்த ஜனத்தை விட்டு, தேசத்தை விட்டு, இனத்தை விட்டு, நான் காண்பிக்கும் தேசத்திற்கு புறப்பட்டு போ என்று சொன்னவுடன், கர்த்தர் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான் (ஆதி. 12:4). கர்த்தர் ஆபிராமை அழைக்கிறார். ஆபிராம் கேள்வி கேட்காமல், தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்து போனார். கர்த்தருக்கு கீழ்ப்படிகிற இருதயம் ஆபிராமுக்குள்ளே காணப்பட்டது. அதனால் தான் கர்த்தர் அவனை ஜெயம் பெற்றவனாக உயர்த்தினார். ஆபிராமுக்கு விரோதமாக ராஜாக்கள் எழும்பின போதிலும் அவரை ஜெயிக்க முடியவில்லை.

இயேசு கலிலேயா கடற்கரையில் நடந்து வரும் போது, பேதுருவும், அந்திரேயாவும் படவில் மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேரும் என்னைப் பின்பற்றி வாருங்கள், நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று இயேசு அழைக்கிறார் (மத். 4:18-20). அவர்களுக்கு சொந்தமாக படகு இருக்கிறது, வலை இருக்கிறது, தொழில் இருக்கிறது, குடும்பம் இருக்கிறது, தேவைகள் இருக்கிறது. ஆனால், என்னை பின்பற்றி வாருங்கள் என்று இயேசு சொன்னதும், அவர்கள் எதைக் குறித்தும் யோசிக்காமல் எந்தக் கேள்வியும் கேட்காமல் கீழ்ப்படிந்து, அப்படியே படகை போட்டு விட்டு இயேசுவோடுகூட வந்தார்கள்.





மத்தேயு 4:21ம் வசனத்தை வாசிக்கும்போது, யாக்கோபும், யோவானும் தங்கள் தகப்பனாரோடு வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களைக் கண்டு, என்னைப் பின்பற்றி வாருங்கள், மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று கர்த்தர் சொன்னார். அதற்கு அப்படியே கீழ்ப்படிந்தார்கள்.

ஆபிராமை தேவன் அழைத்தவுடன், நான் போகிற தேசம் எப்படிப்பட்டது? என் குடும்பம் வாழ்வதற்கு வசதி உண்டா? என்று எதையும் பார்க்கவில்லை. கர்த்தர் அழைத்தவுடன் தன் குடும்பத்தின் பாதுகாப்பைக் குறித்து யோசிக்கவில்லை, தன்னுடைய தேவைகளைக் குறித்து

யோசிக்கவில்லை. தேவன் அழைத்தார் நான் கீழ்ப்படிய வேண்டும் என்று உடனே கீழ்ப்படிந்து சென்றார்.



1974ஆம் ஆண்டு கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினதும் ஊழியத்திற்கு அழைத்தார். நான் ஏதாவது வேலைப் பார்த்துக் கொண்டே ஊழியம் செய்கிறேன், ஞாயிற்றுக்கிழமை தோறும் நான் ஊழியம் செய்கிறேன் என்று ஆறு மாதங்களை கடத்தி விட்டேன். ஆனால் கர்த்தர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார். ஒரு பெரிய தேவன் என்மேல் நம்பிக்கை வைத்து அழைத்த போது, உடனே நான் வரவில்லை. ஆபிரகாம் மாதிரி நான் உடனே கீழ்ப்படியவில்லை. என் சொந்த வாழ்க்கை, என் எதிர்காலத்தைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தேன். ஆறு மாதங்கள் கழித்து கர்த்தர் நேரடியாக சந்தித்து, இந்தத் தேசத்தின் கோடிக்கணக்கான ஜனங்களைப் பார், அவர்களுக்காகத்தான் உன்னை அழைக்கிறேன். நீ உன்னைக் குறித்தும், உன் எதிர்காலத்தைக் குறித்தும், உன் குடும்பத்தைக் குறித்தும் யோசித்துக் கொண்டிருக்கிறாய் என்று அவர் முகமுகமாய் பேசின போது, அழுது என்னை ஒப்புக் கொடுத்தேன். நீர் அழைத்தவுடன் கீழ்ப்படியவில்லையே, கர்த்தர் கூப்பிட்டவுடன் வரவில்லையே, ஆறு மாதங்கள் நான் தாமதம் பண்ணி விட்டேனே என்று நான் இன்றைக்கு துக்கப்படுகிறேன். ஆபிராம் உடனே கீழ்ப்படிந்தார். மக்கள் என்ன சொல்வார்கள், மற்றவர்கள் என்ன பேசுவார்கள், எங்கு போவது? என்ன செய்வது? என்ன நடந்தாலும்? என்னை அழைக்கிற தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று அவருடைய அழைப்புக்கு ஒப்புக்கொடுத்தார். அந்த இருதயம் நமக்குள் இருக்க வேண்டும்.





**''பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப். 1:8)** என்று வாசிக்கிறோம்.

எல்லோரும் வேலையை விட்டு, குடும்பத்தை விட்டு, ஊழியத்திற்குப் போங்கள் என்று சொல்லவில்லை. முதலில் நீங்கள் வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், கர்த்தருக்கு சாட்சியாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். எத்தனை பேர் அந்த அழைப்பை அறிந்து கொண்டிருக்கிறோம், வேலையை விட்டு, முழுநேர ஊழியராக, சுவிசேஷகனாக, மிஷனெரியாக இருக்கிறவர்கள் தான் அழைக்கப்பட்டவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை! நீங்கள் மாணவனாக இருந்தாலும், மாணவியாக இருந்தாலும், ஒரு குடும்ப ஸ்திரீயாக இருந்தாலும், ஒரு வியாபாரியாக இருந்தாலும், ஒரு வங்கியில் வேலை செய்து கொண்டிருந்தாலும் அந்த இடத்தில் தேவனைக் காண்பிப்பதற்காக, கர்த்தரை வெளிப்படுத்துவதற்காக அழைக்கப்பட்டவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, எங்கோ புறப்பட்டு செல்வதுதான் அழைப்பு என்று நீங்கள் தவறான எண்ணம் கொண்டிருக்கிறீர்கள். இல்லை, உங்கள் குடும்பத்திற்குள் சாட்சியாக இருந்து இயேசுவை வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் குடும்பத்தை கட்டுவதற்கு கர்த்தர் உங்களை அழைத்தாரே, அந்தக் குடும்பத்தை கட்டுவதற்கு நீங்கள் ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? கணவர் திட்டுகிறார், மாமியார் திட்டுகிறார், இவர்களோடு வாழ முடியாது என்று ஓடிப் போவாயேயானால், நீ உன்



அழைப்பை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம். குடும்பம் என்றால் பாடுகள், நிந்தைகள், நெருக்கங்கள் வரும். அதற்கு மத்தியில் நின்று கர்த்தருடைய வார்த்தைக் குக் கீழ்ப்படிந்து, குடும்பத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அதுதான் உங்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு. நீங்கள் வேலை செய்கிற இடத்தில் உங்களோடு நூறு பேர் வேலை செய்தாலும், நீங்கள் வித்தியாசமாக அந்த இடத்தில் வேலை செய்து, இயேசுவை வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் அதுதான் உங்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு. ஒரு யோசேப்பைப் போல, ஒரு தானியேலைப் போல யாரும் குற்றம் சொல்ல முடியாதபடி வேலை செய்கிறவர்கள் என்று உங்களுடைய அழைப்பை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் ஆபிராமைப்போல எல்லாவற்றிலும் ஜெயிக்க முடியும்.

**பிரியமான வாலிப மகனே, மகளே! ஆபிராம் தேவனுக்கு கீழ்ப்படிந்து அழைப்புக்கு அர்ப்பணித்ததால் அவரை யாரும் ஜெயிக்க முடியவில்லை. கர்த்தர் துணை நின்று ராஜாக்களும் அவருக்கு முன்பாக நடக்கும்படி செய்தார். அதனால் நீங்கள் எப்பொழுதும் தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படியுங்கள். கர்த்தர் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள். உங்கள் படிப்பு, தொழில், வேலை எதுவானாலும் சரி, நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதற்கு நான் கீழ்ப்படிகிறேன் என்று அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களையும் ஜெயிக்கப் பண்ணுவார்!** ●



## பள்ளிச் செல்லும் மாணவர்களுக்கு...



- பள்ளியில் மற்ற குழந்தைகளுடன் உணவு, குடிநீர், புத்தகங்கள், எழுதுபொருட்களை பரிமாற்றம் செய்யாமல் இருப்பது நல்லது.
- சேர்ந்து விளையாடுவதை தவிர்ப்பது நல்லது.
- பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் வெந்நீரில் குளிப்பது நல்லது.
- இரவு படுக்கும் முன்பு வெந்நீரில் மஞ்சள், கல் உப்பு கலந்து வாய் கொப்பளிப்பது நல்லது
- கொரோனா தொற்றுக் காலத்தில் ஐஸ்கிரீம், குளிர்பானங்கள் மற்றும் இனிப்புகளை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.
- முடிந்தவரை வெந்நீரை குடிப்பது நல்லது.
- தும்மல் மற்றும் இருமல் வரும்போது வாய் மற்றும் மூக்குப் பகுதியை துணி அல்லது டிஸ்யூ கொண்டு மூடிக் கொள்வது நல்லது.
- கண்கள், மூக்கு மற்றும் வாய்பகுதியைத் தொடுவதை தவிர்ப்பது நல்லது.
- உடம்பு லேசாக முடியாததுபோல் உணர்ந்தால் பள்ளிக்கு செல்லாமல் ஓய்வெடுப்பது நல்லது.
- நிறைய நீர் ஆகாரங்களை சாப்பிடுவது நல்லது.




# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!

நாம் நற்செய்தியை அறிவிக்கும்பொழுது பலர் நம்மிடத்தில் கேள்விகளைக் கேட்டு நடைமுறை சிக்கல்களை உண்டாக்குவர். இப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்து சுவிசேஷ ஊழியம் செய்வது எப்படி என்று நாம் கடந்த மாதங்களில் பார்த்துள்ளோம். இப்படிப்பட்ட கேள்விகளை எதிர்க் கொள்வது எப்படி என்பதனை தொடர்ந்து இம்மாதத்திலும் நாம் காணவுள்ளோம்.

### *1. எம்மதமும் சம்மதம்*

நமது ஆத்தும ஆதாய ஊழியத்தில் சந்திக்கிற விநோதமான மக்கள் இவர்கள். துன்மார்க்கனையும் சன்மார்க்கனையும் கர்த்தர் பக்கம் திருப்புவது மிக எளிது. ஆனால் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவர்களை கர்த்தர் பக்கம் திருப்புவது கொஞ்சம் கஷ்டம் தான். ஆனாலும் இப்படிப்பட்டவர்களுக்கு நாம் அதிகமாக ஜெபித்து செயல்பட வேண்டும்.

**இவர்களுக்கு நாம் கூறவேண்டிய பதில் என்ன?**

● இப்படிப்பட்ட மக்களுக்கு நாம் ஊழியம் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரிடத் திலிருந்து ஆவிகளைப் பகுத்தறிகிற வரத்தையும், வெளிப்பாட்டு வரத்தையும் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

● இவர்களிடம் வாக்குவாதம் செய்யக்கூடாது.

● அவர்களுடைய உள்ளான மனுஷனின் தேவை என்ன என்பதை ஆவியானவருடைய துணையோடு கண்டுபிடித்து, அதை வெளிப்படுத்தி அவர்களுக்கு சுவிசேஷம் சொன்னால் அவர்கள் கர்த்தர் பக்கம் திரும்புவார்கள்.

### *2. பரலோகம் செல்ல பல வழிகள் உண்டு*

நாம் நற்செய்தி ஊழியத்தில் சந்திக்கும் இப்படிப் பட்டவர்கள் அறிவாளிகளும் அதிகம் படித்தவர் களுமாய் இருப்பார்கள். பல மார்க்கங்களின் சித்தாந்தங்களையும் வேதங்களையும் நன்றாய் கற்றுத் தேறியவர்கள். எனவே, பரலோகம் செல்வதற்கு பல வழிகள் உண்டு. அவைகளில் ஒரு வழி இயேசுவின் வழி என்பார்கள். இவர்கள் மற்றொரு சித்தாந்தத்தையும் கூறுவார்கள். நதிகள் பல, ஆனால் அவை எல்லாமே கடலில் சங்கமமாகிறது. அதுபோல மதங்களும் அநேகம் உண்டு. அவை எல்லாமே மனிதனை பரலோகம் கொண்டுபோய் சேர்க்கும் என்பார்கள்.

**இவர்களுக்கு நாம் கூற வேண்டிய பதில் என்ன?**

**''இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயி ருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6).** இயேசு ஒருவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமா யிருக்கிறார். மனிதனை இரட்சிக்கிற இரட்சகர் இயேசு ஒருவரே என்று கூறவேண்டும்.

**''அவராலேயன்றி (இயேசு) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே**



**அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப். 4:12).**

●இந்த வசனத்தை அழுத்தமும் திருத்தமுமாய் கூறுங்கள். அப்பொழுது அவர்கள் மனந்திரும்பு வார்கள்.

● இப்படிப்பட்ட நம்பிக்கை உள்ளவர்களுக்கு உபவாசத் துடன் ஜெபிக்கவேண்டும். ஏனென்றால், விசுவாசம் என்பது தேவனுடைய ஆவியாயிருப்பது போல, அவிசுவாசம் என்பதும் பிசாசின் ஆவியாயிருக்கிறது.

●எனவே, ஜெபத்துடன் உபவாசத்துடன் இப்படிப் பட்டவர்களை சந்திப்போமானால் அவர்கள் மனந் திரும்புவார்கள்.

*அன்பான வாலிபர்களே! பரிசுத்த ஆவியானவர் உங்களோடிருந்து எதிர்பேசுகிறவர்கள் மனந் திரும்பும்படி கிருபைக்குள் நடத்துவார். எனவே, எதற்கும் சோர்ந்துப்போகாமல் தைரியமாய் சுவிசேஷம் அறிவிப்போம். அதற்கான பலனை பரலோகத்தில் பெறுவோம்!* ●

தொடர்ந்து அடுத்த பகுதியில் சந்திப்போம்...



# இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

## எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டப்படுதல்!

எருசலேம் என்பது எபிரேய மொழியில் ''யெருசலையிம்'' என்று அழைக்கப்படுகிறது. எருசலேமைக் குறிக்கும் இந்த எபிரெய சொல்லுக்கு ''அமைதியின் உறைவிடம்'' என்று பொருள்படும். எட்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் இந்நகரின் மொத்த பரப்பளவு 125 சதுர கி.மீ. ஆகும். உலகின் பழமையான நகரங்களில் இதுவும் ஒன்றாகும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என மூன்று யூதர்கள் பிரிவினருக்கும் எருசலேம் புனித நகராக உள்ளது.

எருசலேம் இதுவரை இருமுறை அழித்துத் தரை மட்டமாக்கப்பட்டது. 23 தடவை முற்றுகையிடப் பட்டது. 52 தடவை தாக்குதலுக்கு உள்ளானது 44 தடவை அந்நியர்களால் கைப்பற்றப்பட்டது **''அவர் என்னை நோக்கி: உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்;...'' (1நாளா. 28:6)** என்று கர்த்தர் சொன்ன வாக்கின்படி சாலொமோனால் முதல் தேவ ஆலயம் கட்டப்பட்டது. ஆனால் அந்த முதலாம் ஆலயம் கி.மு. 587-ல் பாபிலோனிய பேரரசர் நேபுகாத்நேச்சார் எருசலேமின் மீது படையெடுத்த போது எருசலேம் ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டது. எழுபது ஆண்டுகள் கழித்து எஸ்றா மற்றும் நெகேமியா போன்றவர்கள் மூலமாக இரண்டாம் ஆலயம் கட்டி எழுப்பப்பட்டது. பிற்காலங்களில் ஏரோது இராஜாவால் மேலும் இந்த ஆலயம் புணரமைக்கப்பட்டு மீண்டும் கட்டப் பட்டது. இந்த தேவாலயத்தின் கட்டடங்களை சீஷர்கள் இயேசுவுக்கு காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். **''இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத். 24:2).** இயேசு சொன்னபடியே கி.பி. 70ம் ஆண்டில் ரோமர்கள் எருசலேம் நகரத்தையும் அதின் தேவாலயத்தையும் தீக்கிரையாக்கினார்கள். தீயினால் தேவாலயத்தின் மேல் மூடியிருந்த பொன் தகடுகள் உருகி, கல் சந்துக்களில் சிக்கிக் கட்டிகளாகி விட்டன. இந்த பொன் தகடுகளை எடுப்பதற்காக ரோம சேவகர்கள் எருசலேம் தேவாலயத்தின் ஒவ்வொரு கல்லையும் தனித்தனியாகப் பிரித்தெடுத்தனர். இவ்விதமாக இயேசு கிறிஸ்துவின் முன்னறிவிப்பின்படியே ''ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராத படிக்கு'' எல்லாம் இடித்துத் தகர்த்து எறியப்பட்டன. தகர்த்து எறியப்பட்ட தேவாலயம்வேதவாக்கியங்களின்படி, இயேசுவின் வருகைக்கு முன்பு தேவாலயம் கட்டப்பட்ட வேண்டும்.



இந்த வேத வாக்கியங்களின்படி 2018ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எருசலேமை இஸ்ரேலின் தலைநகரமாக அறிவித்தார். அப்போது பேசிய இஸ்ரேலின் அதிபர் பெஞ்சமின் நெதன்யாஹூ எருசலேமின் ஆலயம் மீண்டும் கட்டப்படும் என்று அறிவித்தார். Institute Temple Mount என்ற அமைப்பு தேவாலயம் கட்டுவதற்கு தயாரான வடிவமைப்போடு ஆயத்தமாக உள்ளது. **''இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்:**

**எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும்,அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்'' (தானி. 9:25).** ஏனென்றால் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு ஒப்பந்தம் செய்து அதை இடையிலே முறித்து விடுவான். பின் தேவாலயத்திற்கு போய் அமர்ந்து, தானே தேவன் என்று சொல்லிக் கொள்ளுவான். அந்திக்கிறிஸ்துவை ஆதரிக்கும் நாடுகள் இஸ்ரேல் நாட்டுடன் உடன்படிக்கை செய்து கொண்டு அவனை ஆதரிப்பார்கள். இதற்கான ஆயத்தப்பணிகள் மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்கு முன் எருசலேம் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு இருக்கும். தேவாலயம் கட்டப்படுதல் இயேசுவின் வருகைக்குமுன் நடக்கும் முக்கியமானதொரு அடையாளம் ஆகும்.





*எனக்கன்பான வாலிபர்களே! இயேசுவின் வருகைக்கு முன்பாக இந்தப் பூமியில் என்னவெல்லாம் சம்பவிக்கும் என்று வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றதோ அவைகள் எல்லாம் வெகு தீவிரமாக நம்மைச் சுற்றி நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. இந்த உலகம் ஒரு பக்கம் அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறது. அதற்கு முன்பாக இயேசுவின் வருகை இருக்கும். அவரின் வருகைக்கு உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் ''நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' (மத். 24:44)*●

இயேசுவின் வருகையைக் குறித்த இன்னுமொரு அடையாளத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.


இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

Sathiyam TV

YouTube

Comforter DIGITAL CHANNEL

சத்தியம் TV சனிக்கிழமை 6:30am

7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547




## அதோனிபேசேக்

யோசுவா கானானியர்களோடு யார் முதலில் போர் செய்ய வேண்டும் என்று விசாரித்தபோது, கர்த்தர், யூதா கோத்திரத்தார் போர் செய்ய வேண்டும், அந்தத் தேசத்தை நான் அவர்கள் கையில் கொடுக்கிறேன் என்றார். யூதா கோத்திரத்தார் தங்கள் சகோதரர்களான சிமியோன் கோத்திரத்தாரிடம், எங்களுக்குக் கொடுக்கப் பட்ட பகுதிக்குப் போய் கானானியர்களைத் துரத்தியடிக் கலாம், பின்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்ட



பகுதிக்கு வருவோம் என்று சொல்லி சிமியோன் கோத்திரத்தார் அவர்களோடு போனார்கள். யூதா கோத்திரத்தார் போர் செய்த போது கானானியர்களையும், பெரிசியர்களையும் தேவன் அவர்கள் கையில் கொடுத்தார். பேசேக் என்ற இடத்தில் அவர்கள் 10,000 வீரர்களைத் தோற்கடித்தார்கள். கானானியர்களையும், பெரிசியர் களையும் தோற்கடித்தபோது, பேசேக்கில் அதோனி பேசேக் தப்பித்து ஓடினார். அவனைத் துரத்திப்பிடித்து, அவனுடைய கை, கால் பெருவிரல்களைத் துண்டித் தார்கள். அப்போதுதான் அதோனிபேசேக் 70 இராஜாக்களுடைய கை, கால் பெருவிரல்களை நான் துண்டித்தேன். அவர்கள் என் மேஜையிலிருந்து கீழே சிந்துவதை பொறுக்கித் தின்றார்கள். நான் செய்த பாவத்துக்கு ஏற்ற சரியான கூலி எனக்கு கர்த்தர் கொடுத்தார் என்று சொன்னான். அதன்பின் அவனை எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள். அங்கே அவன் செத்துப் போனான் (நியா. 1:1-7).

**அன்பான வாலிபர்களே! கர்த்தர் சரிகட்டுகிற தேவன் என்பதை அதோனிபேசேக்கின் வரலாற்றில் படிக்கிறோம். எனவே நாம் செய்த பாவங்களோ, குற்றங்களோ எதுவாக இருந்தாலும், கட்டயாம் ஒருநாள் கர்த்தர் சரிகட்டுவார் என்பதை மறந்து விடாதீர்கள்!**

## யாக்கோபு

ஈசாக்கின் மூத்த மகன் ஏசா ஒருநாள் வேட்டையாடி மிகவும் களைப்பாக வீட்டுக்கு வரும்போது, யாக்கோபு சுவையான கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். ஏசா, அந்த சுவையான சிவப்புக்கூழைக் கொஞ்சம் கொடு என்று யாக்கோபிடம் கேட்டான். அதற்கு யாக்கோபு, நீ உன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை எனக்கு கொடு நான் உனக்கு கூழ் தருகிறேன் என்றான். ஒரு கப் பயிற்றங்கூழுக்காக தன் சொத்தையே எழுதிக் கொடுத்தான். ஈசாக்கு வயதான காலங்களில் தனது மூத்த மகனுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்க ஆசைப்பட்டார். ஆனால் சின்ன மகனான யாக்கோபுக்கு அந்த ஆசீர்வாதம் கிடைக்க தாயான ரெபெக்காள் உதவி செய்தாள். இந்த விஷயம் ஏசாவிற்கு தெரிந்தவுடன் மிகவும் கோபப்பட்டு தன் தம்பியை கொல்ல திட்டம் போட்டான். அதை அறிந்த ரெபெக்காள் தன் சகோதரனாகிய லாபானிடம் யாக்கோபை அனுப்பி வைக்கிறாள். அங்கு லாபானிடம் தன் மகள் ராகேலை மணம் செய்ய விரும்பி 7 ஆண்டுகள் வேலை செய்தான். லாபான் யாக்கோபுக்கு ராகேலை மணமுடித்து கொடுக்காமல் லேயாளை மணமுடித்துக் கொடுக்கிறான். திருமணத்தின்போது லாபான் யாக்கோபை



ஏமாற்றினான். ராகேலை திருமணம் செய்ய வேண்டுமானால் இன்னும் 7 ஆண்டுகள் வேலை செய்ய ஒப்புக் கொண்டான். யாக்கோபு 7 ஆண்டுகள் வேலை செய்தான் (ஆதி. 25-29 அதிகாரங்கள்).

**அன்பான வாலிபர்களே! தன் சொந்த அண்ணனை 2 முறை ஏமாற்றினான் யாக்கோபு. ஆனால் காலம் கடந்த பின்பு யாக்கோபு தன் மாமனாரால் ஏமாற்றப்பட்டான். தான் செய்த பாவத்துக்கு ஏற்ற தண்டனையை கர்த்தர் சரிகட்டுவார் என்பதை யாக்கோபின் சரித்திரத்தின் மூலம் அறிந்திருப்பீர்கள். எனவே எக்காரணத்தைக் கொண்டும் யாரையும் ஏமாற்றாமல் கர்த்தருக்கு பயந்து நடப்பீர்களென்றால் உங்களுக்கு ஆசீர்வாதம்!**

## யோசேப்பு

தன் சகோதரர்களால் வெறுக்கப்பட்டு, மீதியானியர் கையில் 20 காசுக்காக விற்கப்பட்டான். எகிப்தின் அதிபதி போர்த்திபார் விலைக்கு வாங்கினான். அவன் தனக்கு உண்டான எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்து யோசேப்பை விசாரணைக்காரனு மாக்கினான். அவன் செய்யாத தவறுக்காக சிறைச்சாலைக்குச் சென்றான். சிறைச்சாலையில் உண்மையாய் இருந்த படியால், கர்த்தர் அவனை மறுபடியும் உயர்த்தினார். எகிப்து தேசத்தில் உண்டாகும் பஞ்சத்திற்கு தப்பும்படியாக யோசேப்பை தேசம் முழுவதற்கும் அதிகாரியாக்கினார். எல்லா தேசங்களிலும் பஞ்சம் உண்டானபோது, எகிப்தில் யோசேப்பின் கையில் தானியம் வாங்கினார்கள். தன்னுடைய சகோதரர்கள் அவனுக்கு தீமையான காரியங்கள் செய்த போதிலும், யோசேப்பு அவர்கள் செய்த தீமையானக் காரியங்களை நன்மையாக பார்க்கிறவனாக இருந்தான். தன்னுடைய சகோதரர்கள் தீமை செய்த போதிலும் அவர்களுக்கு தீமை செய்ய வேண்டும் என்று யோசேப்பு நினைக்கவில்லை. மாறாக அவர்களுக்கு நன்மையே செய்தான். ஆனால் அவனுடைய சகோதரர்களுக்கு யோசேப்பை பார்க்கும் போதெல்லாம் அவனுக்கு செய்த தீமை தான் அவர்கள் கண்களுக்கு முன்பாக வந்து கொண்டே இருந்தது.



அவனுடைய சகோதரர்கள், யோசேப்பைப் பார்த்து நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்க வேண்டும் என்று சொன்னார்கள். யோசேப்பு தனக்கு தீமை செய்தவர்களுக்கு தீமைக்கு சரிகட்டுவேன் என்று சொல்லவில்லை. மாறாக அவன் அவர்களுக்கு நன்மையை செய்தான் (ஆதி. 39, 50 அதிகாரங்கள்).

**அன்பான வாலிபர்களே! யோசேப்பை அவன் சகோதரர்கள் வெறுத்தார்கள். ஆனால் யோசேப்பு நன்மை செய்தபடியால் கர்த்தர் அவனோடிருந்து அவனது காரியத்தை வாய்க்கப்பண்ணினார். எந்த சகோதரரை வெறுத்தார்களோ, அவன் கையாலேயே நன்மையை பெறும்படி கர்த்தர் சரிகட்டினார்!.**

## சீமேயி

தாவீது ராஜா தன் சொந்த மகனான அப்சலோமால் விரட்டப்பட்டு, மறைவிடமான இடத்துக்கு போகிறான். அப்பொழுது சீமேயி, தாவீது ராஜாவைப் பார்த்து, தொலைந்து போ, தொலைந்து போ என்று தூஷித்து, நீ ஒரு இரத்தப்பிரியன், இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய் என்று சொல்லிக் கொண்டே கற்களை அவன் மேல் எறிந்தான். தாவீது



மௌனமாக நடந்து போனான். அபிசாய், தாவீதைப் பார்த்து அந்தச் செத்த நாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன், நான் போய் அவன் தலையை வெட்டிப் போடட்டுமே என்றதும், என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே, என் பிராணனை வாங்கத்தேடும் போது, இவன் எத்தனை அதிகமாய் செய்வான். அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான் (2 சாமு. 16:5-12). தாவீது திரும்பி அரியணையை நோக்கி வரும்போது, அந்தச் சீமேயி தாவீது ராஜாவுக்கு எதிர் கொண்டோடி, ராஜாவே என்னை மன்னித்து விடும் என்று கதறினான் (2 சாமு. 16:5-19).

**அன்பான வாலிபர்களே! எந்தக் குற்றமும் செய்யாத தாவீதுக்கு விரோதமாக சீமேயி எழும்பினான். ஆனால் காலம் வந்தபோது, நிந்தனைக்கு பதிலாக நன்மையை சரிகட்டினார். நீங்களும் தாவீதைப் போல பிறர் தூற்றும்போது, அமைதியாக இருந்தால் நன்மையைப் பெற்றுக் கொள்வீர்கள்!.**

# பிரசங்கி [ நடைமுறை உண்மையின் மூலம் சத்தியம் ]

**அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் கவிதை நூல்களில் நான்காவது நூலான "பிரசங்கி" புத்தகத்தைப் பற்றி சுருக்கமாகக் காணலாம்.**

**அறிமுகம்:**
சூரியனுக்கு கீழே வாழும் மனிதனின் முயற்சிகள் அவற்றால் பயன் ஏதுமில்லை என்பதையும் எல்லாமே 'மாயை' என்பதையும் இப்புத்தகம் உணர்த்துகிறது. இப்புத்தகத்தில் 'மாயை' என்ற வார்த்தை 37 முறையும், 'சூரியனுக்குக் கீழே' என்ற வார்த்தை 29 முறையும் வருகிறது.

**ஆசிரியர்:** சாலொமோன்
**காலம்:** கி.மு. 935
**அதிகாரங்கள்:** 12
**வசனங்கள்:** 222
**வார்த்தைகள்:** 5,584
**முக்கிய நபர்கள்:** சாலொமோன் ராஜா.



## பிரசங்கியின் சுருக்கம்

### ➜ மாயை

- வாழ்க்கைச் சுழற்சியின் மாயை (1:1-11 வசனங்கள்)
- மனித ஞானத்தின் மாயை (1:12-18 வசனங்கள்)
- செல்வம் மற்றும் மகிழ்ச்சியின் மாயை (2:1-11 வசனங்கள்)
- பௌதிகத்தின் மாயை (2:12-23 வசனங்கள்)
- கடவுளின் அருளில் திருப்தியாக அனுபவிக்க வேண்டும் (2:24-26 வசனங்கள்)

### ➜ வாழ்க்கையில் தேவனுடைய மாறாத திட்டம்

- வாழ்க்கையின் சம்பவங்களை தேவன் முன் தீர்மானித்தல் (3:1-10 வசனங்கள்)
- வாழ்க்கையின் நிலையை தேவன்முன் தீர்மானித்தல் (3:12-22 வசனங்கள்)
- தேவன் எல்லாரையும் நியாயந்தீர்த்தல் (3:14-22 வசனங்கள்)

### ➜ வாழ்க்கை சூழ்நிலையின் மாயை

- அடிமைத்தனம் (4:1-3 வசனங்கள்)
- கடின உழைப்பில் வெறுமை (4:4-12வசனங்கள்)
- அரசியல் வெற்றியின் வெறுமை (4:13-16 வசனங்கள்)
- மனித மதத்தின் குறைவு (5:1-7 வசனங்கள்)
- மனித செல்வத்தின் குறைவு (5:8-20 வசனங்கள்)

### ➜ முழு வாழ்க்கையின் மாயை

- செல்வம் திருப்தியளிக்காது (6:1,2 வசனங்கள்)
- குழந்தைகளால் திருப்தி கிடைக்காது (6:3-6 வசனங்கள்)
- வேலையினால் திருப்தி காண முடியாது (6:7-12 வசனங்கள்)

### ➜ மாயையான வாழ்க்கைக்கு ஆலோசனை

- மனிதனின் பார்வையில் ஆலோசனை (7:1-29 வசனங்கள்)
- தேவனின் பார்வையில் ஆலோசனை (8,9 அதிகாரங்கள்)
- நிரந்தரமற்ற வாழ்க்கையின் பார்வையில் ஆலோசனை (10 அதிகாரம்)
- வாழ்க்கையின் வித்தியாசமான வயதுகளில் கேட்க வேண்டிய ஆலோசனை (11,12 அதிகாரங்கள்)

## பிரசங்கியில் கிறிஸ்து

கிறிஸ்து மட்டுமே மனிதன் தேவனிடம் செல்லும் வழியாயிருக்கிறார். அங்கே மனிதன் முழுமையையும், திருப்தியையும், பரிபூரண ஜீவனையும் (யோவான் 10:10; 7:37,38) காண்கிறான். மனிதன் வாழக்கையில் அனுபவிக்கிற குறைவுகள் இயேசு கிறிஸ்துவோடு உள்ள தனிப்பட்ட உறவின் மூலம் மட்டும் நிறைவு செய்யப்பட முடியும்●

# வேதாகம புதையல் வேட்டை

கீழே வேதத்தில் தேவன் சிலரிடம் கேட்ட கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான நபரைக் கண்டறிந்து, விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1 நான் பரிதபியாமல் இருப்பேனோ?

2. நீ எங்கே இருக்கிறாய்?

3. உன் சகோதரன் எங்கே?

4. சர்வ வல்லவரோடு வழக்காடி அவருக்கு புத்தி படிப்பிக்கிறவன் யார்?

5. நீ எங்கேயிருந்து வருகிறாய்?

6. ஏன் அழுகிறாய்?

7. நீ என்னத்தைக் காண்கிறாய்?

8. உன் கையில் இருக்கிறது என்ன?

9. இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்பட வேண்டும்?

10. மழைக்கு ஒரு தகப்பனுண்டோ?

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.11.2021**

## கடந்த மாத விடைகள்

1 யோசேப்பு [மத். 1:20]

2 யாக்கோபு [ஆதி. 28:12]

3 சாஸ்திரிகள் [மத். 2:12]

4 யோசேப்பு [ஆதி. 37:19]

5 சாலொமோன் [1 இராஜா. 3:5]

6 நேபுகாத்நேச்சார் [தானி. 2:1]

7 பிலாத்துவின் மனைவி [மத். 27:19]

8 பவுல் [அப். 16:9]

9 யோசேப்பு [மத். 2:13]

10 அபிமெலேக்கு [ஆதி. 20:3]

## கடந்த மாத வெற்றியாளர்

பியூலா,
கிருஷ்ணகிரி

தேவன் கேட்ட கேள்விகள்.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**Jesus Redeems Youth Ministries,**
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353333
youth@jesusredeems.org

# இனிமையான வெற்றி பயணம்!



இளம் வெற்றியாளர்களுக்கு என்னுடைய கனிவான வாழ்த்துக்கள்! சோதனைகள், தோல்விகள், பயம், நோய் போன்ற பிரச்சனைகள் அடிக்கடி நம் வாழ்வில் வந்து வந்து செல்லும். ஆனால் இவற்றையெல்லாம் எதிர்கொள்பவர்கள்தான் வெற்றியாளர்களாக உரு வாகின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் கண்டு பயந்து நம் வாழ்க்கை என்னவாகப் போகிறதோ என்று அஞ்சுபவர்கள் வாழ்க்கையில் தோல்வியடைகிறார்கள். நாம் சாதிக்கப் பிறந்தவர்கள், உங்களைத் தட்டி எழுப்பக்கூடிய ஒரு சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் முன்...

தாமஸ் ஸ்டீபன் மோனகன் **(Thomas Stephen Monaghan)** 1937ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிச்சிகனுக்கு அருகிலுள்ள ஆன் ஆர்பர் என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய குடும்பம் பணக்கார குடும்பம் இல்லை. நான்கு வயது இருக்கும் போது தாமஸின் தந்தை இறந்து விட்டார். இரண்டு ஆண்பிள்ளைகளை வைத்து வாழ்க்கை நடத்துவது தாமஸின் தாயாருக்கு மிகக் கடினமாக இருந்தது. எனவே இவரது தாயார் தாமசையும் இவரது சகோதரரையும் ஓர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்த்தார்.




தன்னுடைய சிறு வயதிலேயே தந்தையை இழந்ததால், அரவணைக்கும் தாயாரின் அன்பிற்காக 7 வருடங்கள் ஏங்கினார். தாமஸ் ஒவ்வொரு நாளும் ஆதரவற்றோர் இல்ல வாசலில் நின்று எப்பொழுது தாயார் வருவார் என்று எதிர்பார்த்து காத்திருப்பார். தாமஸ் நினைத்திருந்தபடியே ஒருநாள் அவரது தாயார் தாமசையும் அவரது சகோதரனையும் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். இனி சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாவும் நாம் வாழலாம் என நினைத்தார். ஆனால் குடும்ப சூழ்நிலை இவரை சந்தோஷமாக வாழ அனுமதிக்கவில்லை. வறுமை இவரது குடும்பத்தை எதிர்கொள்ள, இவர் தன்னுடைய சிறுவயதில் என்னென்ன வேலைகள் தெரியுமோ அதையெல்லாம் செய்து கடினமாக உழைத்தார். உறக்கத்தை இழந்து இரவும் பகலும் உழைக்கத் தொடங்கினார். படிப்பிற்கான செலவு மற்றும் பிற தேவைகள் தாமஸை மிகவும் நெருக்க ஆரம்பித்தது. எனவே தன்னுடைய கல்லூரிப் படிப்பை இவரால் தொடர முடியவில்லை. எனவே பல வேலைகளைச் செய்து வருமானம் ஈட்டத் தொடங்கினார்.

ஏதோ ஒரு வேலை செய்து தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த தாமஸிற்கு, இவர் சகோதரரிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. மிச்சிகனின் சிலான்ட்டி என்ற இடத்தில் ஒரு சின்னஞ்சிறு பீட்ஸா கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால் அதை மூட முடிவு எடுத்தார் அந்தக் கடையின் உரிமையாளர். எனவே இருவரும் இணைந்து முதலீடு செய்து அந்த பீட்ஸா கடையை வாங்க வேண்டுமென்பதே அவரது சகோதரரின் யோசனையாக இருந்தது. தாமசும் அதற்கு சம்மதித்து அந்தக் கடையை வாங்கி முதலீடு செய்தார்கள். DomiNick's என்ற பெயர் கொண்ட கடையை 900 டாலருக்கு வாங்கினார்கள். தாமஸ் இந்த பீட்ஸா கடையை வைத்து தன்னுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கொண்டு வர முடிவு செய்தார். ஆனால் தாமஸின் சகோதரருக்குக் கடையை குறித்த எந்த எண்ணமும் இல்லை. எனவே தாமஸின் சகோதரர், எனக்கு இந்தத் தொழில் சரி வராது, நீயே தனியாக கடையை நடத்திக் கொள், ஆனால் நான் முதலீடு செய்த பங்கை மட்டும்

கொடுத்து விடு என்றுக் கூறி கடையை விட்டு விலகிவிட்டார்.



தன்னுடைய தொழிலுக்கு உதவியாக தன் சகோதரர் வருவார் என்று எண்ணிய தாமஸிற்கு பேரதிர்ச்சியாக இருந்தது. தாமஸ் அந்தக் கடையின் உரிமையாளர், பீட்ஸா கடையை முன்னேற்றத்திற்கு கொண்டு வர வேண்டும், புதிய வாடிக்கையாளர்களை கடைக்கு வரவைப்பது, ஏற்கனவே இருக்கும் பழைய வாடிக் கையாளர்களை இழக்காமல் பேணி காப்பது போன்ற காரியங்கள் பெரும் சவாலாக இருந்தது. வாடிக்கையாளர்களை கவரும் வண்ணமாக கடையின் பெயரை 'Domino's Pizza' என்று மாற்றினார். கடையின் பெயரில் மட்டும் மாற்றம் ஏற்பட்டதே தவிர வருமானத்தில் மாற்றமே இல்லை. தொழில் நஷ்டமாக ஓடியது. எனவே அடுத்ததாக அதிகம் விற்பனையாகாத கேக், சாண்ட்விச்சை மெனுவிலிருந்து தூக்கிவிட்டார். இவற்றிற்கு பதிலாக விதவிதமான பீட்ஸா வகைகளை மெனு பட்டியலில் சேர்த்தார். பீட்ஸா விற்பனையில் தன் முழு கவனத்தையும் செலுத்தினார். வாடிக்கையாளர் களை கவரும் வண்ணம் Home Delivery என்ற முறையை அறிமுகம் செய்தார். இதனால் இவரது பீட்ஸா கடை பரப்பரப்பாக வேலை செய்யத் தொடங்கியது.



வாடிக்கையாளர்கள் பீட்ஸாவை சூடாக சுவைக்கும் வண்ணம் பிரத்யேகமான பாக்ஸை வடிவமைத்தார். பீட்ஸாவின் சுவையும் தரமும் வாடிக்கையாளர்களை ஈர்க்கத் தொடங்கியது. அதே ஆண்டு மேலும் இரண்டு பீட்ஸா கடைகளைத் திறந்தார். Domino's pizza Logoவில் மூன்று புள்ளிகள் இருக்கும். அது தாமஸ் ஆரம்பித்த முதல் மூன்று கடைகளை குறிப்பிடத்தான் அந்த மூன்றுப் புள்ளிகளை வைத்திருப்பார். அவையே டோமினோஸின் அடையாளமாகிப் போனது. தாமஸின் வெற்றி சிறிது காலம்கூட நீடிக்கவில்லை. தாமஸ் எங்கு சென்றாலும் தோல்வி அவரை விடாமல் பின் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்தது. இவரது முதல் கடை எதிர்பாராத விதமாக தீ விபத்துக்குள்ளாகி தாங்க முடியாத நஷ்டம் ஏற்பட்டது.



ஆனால் தாமஸ் அவற்றை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. அந்த ஒரு கடையால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய புதிய ஐந்து கடைகளைத் திறந்தார். இவரின் வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. சிறிது நாள் கழித்து, வாடிக்கையாளர்ளிடமிருந்து பீட்ஸாவின் தரம் சரியில்லை என்று புகார்கள் வர ஆரம்பித்தன. இதனால் விற்பனை ஒரே நொடியில் சரியத் தொடங்கியது. ஆனால் எதற்கும் தளராத தாமஸ், அவரசப்படாமல் பொறுமையாக ஒவ்வொரு பிரச்சனைகளையும் எதிர்கொள்ளத் தொடங்கினார். ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு 'அரை மணி நேரத்தில் பீட்ஸா டெலிவரி' என்று புதியதாக இன்னொரு திட்டத்தை அறிமுகப்படுத்தினார் அப்பொழுது Domino's pizza கடைகள் 200 இருந்தன. 'ஒரு நிமிடம் தாமதம் ஆனாலும் வாங்க வேண்டாம்' என்ற புதிய அறிவிப்பு வாடிக்கையாளர்களை வெகுவாக கவர ஆரம்பித்தது. மீண்டும் pizza விற்பனை அதிவேகத்தில் உயர்ந்து, உச்சத்தைத் தொட்டது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் தான் டோமினோஸ் கடைகள் அதிகம் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 10 லட்சம் டோமினோஸ்கள் டெலிவரி செய்யப்படுகிறது, அதுமட்டுமல்லாமல் பல சிறப்பம்சங்களை இன்று இந்த நிறுவனம் செய்து உள்ளது.




அன்பான வாலிபர்களே! தளராத உள்ளம், எதையும் எதிர்கொள்ளும் இருதயம் இவை இரண்டும் ஒரு மனிதனை வெற்றியாளராக வடிவமைக்க உதவும் எழுத்தாணிகள். எந்த சூழ்நிலையிலும் துவண்டு போகாதீர்கள், எல்லாவற்றையும் எதிர்கொள்ளுங்கள்!! வெற்றி சரித்திரம் படையுங்கள்!!! ●

# வேதமும், விஞ்ஞானமும்!

விஞ்ஞானிகள் ஒவ்வொரு காலத்திலும் விஞ்ஞான ரீதியாக அடிக்கடி தவறு விட்டிருக்கிறார்கள். ஆயினும் பரிசுத்த வேதாகமம் ஒருபோதும் தவறுவிடவில்லை. இது அறிவியல் பூர்வமானவற்றை துல்லியமாக நிரூபித்துள்ளது.

| விஞ்ஞானிகள் ஆரம்பத்தில் நம்பியது | இக்காலத்தில் அறிவியல் காண்பிப்பது | வேதாகமம் எப்போதும் கூறுவது |
|---|---|---|
| முழு பிரபஞ்சத்திலும் 1200 நட்சத்திரங்கள் மட்டுமே இருக்கும். | டிரில்லியன் கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றை மனிதனால் எண்ண முடியாது! | "வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும்..." [எரேமியா 33:22]. |
| பூமி தட்டையானது. | பூமி உருண்டையாக உள்ளது. | "அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்;..." [ஏசாயா 40:22]. |
| ஒளி பயணிக்காது, அது அங்கேயே தான் இருக்கிறது. | ஒளி பயணிக்கும் மற்றும் பௌதீக இயல்புகளைக் கொண்டுள்ளது; 'ஒளி அலைகள்' அல்லது ஃபோட்டான்கள். | "வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே?..." [யோபு 38:19]. |
| ஒரு நபரை குணப்படுத்த வேண்டுமாயின், அவரில் காணப்படுகின்ற அசுத்தமான குருதி வெளியேற்றப்படல் வேண்டும். | குருதி உயிருக்கு இன்றியமையாதது, சில சமயங்களில் குருதியை சேர்ப்பதற்காக ஒரு குருதி மாற்றீடு செய்ய வேண்டியது ஏற்படும். | "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது;..." [லேவி. 17:11]. |
| பூமி முழுவதும் காற்று நேராக வீசுகின்றது. | காற்று சுழிகள் பெரிய வட்ட வடிவங்களில் நகரும். | "காற்று தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும்" [பிரசங்கி 1:6] |
| பூமி ஒருவரின் முதுகில் சுமக்கப்படுகிறது. | பூமி விண்வெளியில் மிதக்கிறது. | "...பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்" [யோபு 26:7]. |
| மக்கள் இயல்பாகவே வியாதிப்படுகிறார்கள்; கை கழுவ வேண்டிய அவசியமில்லை. | தொடுவதின் மூலம் பல நோய்கள் பரவுகின்றன; ஓடும் நீரில் கைகளை கழுவ வேண்டும். | "...தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் தேகத்தை ஊற்றுநீரில் கழுவக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பான்" [லேவி 15:13] |
| நட்சத்திரங்கள் அனைத்துமே ஒன்றுக்கொன்று ஒத்தவை. | ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் வித்தியாசமும் தனித்துவமுமானது. | "...மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது" [1கொரி 15:41]. |



# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம் 2021



















எழுப்புதலில் பயன்படுத்துவதற்காக 7 விதமான யௌவன சந்ததியை (புதிய தலைமுறை) எழுப்புவேன் என்று தேவனாகிய கர்த்தர் வாக்குப் பண்ணினபடியே, தமிழ்நாட்டிலிருந்து 3500க்கும் அதிகமான வாலிபர்களை கர்த்தர் எழுப்பினார். அதைத் தொடர்ந்து கிழக்கிந்திய மாநிலங் களிலிருந்து சுமார் 961 வாலிபர்களை எழுப்பி, எழுப்புதலின் அக்கினியை எடுத்து சென்றனர்.

கடந்த செப்டம்பர் மாதம் வட இந்தியாவின் (டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியபிரதேசம், இமாச்சல பிரதேசம், சண்டிகர், உத்திரபிரதேசம் மற்றும் உத்திராஞ்சல்) 9 மாநிலங்களிலிருந்து 998 இளம் வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கென்று எழுப்பு தலை பரவச் செய்வோர் பயிற்சி முகாம் நடத்தி அவர்களை அக்கினியாய் நிரப்பி அனுப்ப தேவன் கிருபை செய்தார்.

எழுப்புதலுக்காக ஜெபிப்பதன் அவசியத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதன் முக்கியத்துவத்தையும் குறித்து சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் விளக்கி சொன்னார்கள். தீர்க்கதரிசனத் தலைமுறை மற்றும் யுத்ததலைமுறைகளைக் குறித்து சகோ. வின்செண்ட் செல்வக்குமார் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள் எழுப்புதலுக் காக ஜெபிக்கவும், தேசத்தில் எழுப் புதலைப் பரவ செய்கிறவர்களாகவும் மாற்றி தேவன் அனுப்பினார்.



# ஜெபக்கையேடு

நவம்பர் 2021

## பெண்கள், குழந்தைகள்-பலாத்காரம்

▸ கடந்த 2020 ஆம் ஆண்டு நாடு முழுவதும் 28,046 பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 28 ஆயிரத்து 153 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

▸ தினசரி 77 பலாத்கார வழக்கு என்ற வீதத்தில் பதிவாகி உள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

▸ இதில் 18 வயதை தாண்டியவர்கள் 25,498 பேர், 18 வயதுகுட்பட்ட 2,655 சிறுமிகள்.

▸ அதிகபட்சமாக ராஜஸ்தான் மாநிலத்தில் 5,310 வழக்குகளும், உத்திரபிரதேசத்தில் 2,769 வழக்குகளும், மத்தியபிரதேசத்தில் 2,339 வழக்குகளும், மகாராஷ்டிராவில் 2,061 வழக்குகளும், அசாமில் 1,657 வழக்குகளும் பதிவாகி உள்ளது.

▸ பலாத்காரம் தவிர, பெண்களுக்கு எதிரான அடக்குமுறை தாக்குதல்களில் 85,392 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.



## ஜெபக்குறிப்புகள்

1. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

2. நாடு முழுவதும் பலாத்காரம் செய்யப் பட்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்பட்டு வெளிவர ஜெபிப்போம்.

3. தினசரி பதிவாகும் 77 பலாத்கார வழக்குகளும் குறைக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு விரோதமான செயல்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

4. தேசத்தில் பலாத்காரங்கள் தடுக்கப் படவும், வழக்குகள் சீக்கிரத்தில் முடிக்கப் படவும் ஜெபிப்போம்.

5. பெண்களுக்கு எதிரான அடக்குமுறை சம்பவங்கள், கடத்தல், வரதட்சணை கொடுமைகள் தடுக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## சாலை விபத்துகள்

▸ இந்தியாவில் கடந்தாண்டு நடந்த சாலை விபத்துகளில் 1.20 லட்சம் பேர் இறந்துள்ளனர்.

▸ தினமும் 328 பேர் பலியாகி இருப்பதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்துள்ளது.

▸ கடந்த 3 ஆண்டுகளில் 3.92 லட்சம் பேர் சாலை விபத்துகளினால் உயிரிழந்துள்ளனர்.

▸ கடந்தாண்டில் அதிவேகமாக வாகனங்களை ஓட்டியது தொடர்பாக 1.30 லட்சம் வழக்குகள் பதிவாகியுள்ளன.

▸ அதிவேகமாக வாகனங்களை ஓட்டி விபத்து ஏற்பட்டு படுகாயம் அடைந்ததாக 2020ஆம் ஆண்டில் 85,920 வழக்குகளும், 2019-ல் 1.12 லட்சம், 2018-ல் 1.08 லட்சம் வழக்குகளும் பதிவாகி உள்ளன.



## ஜெபக்குறிப்புகள்

1. சாலை விபத்துகளினால் நடைபெறும் இறப்புகள் குறைக்கப்படவும், விபத்துகள் நடைபெறாமல் தடுக்கப்படவும் ஜெபிப் போம்.

2. தினமும் விபத்துகளினால் ஏற்படும் மரணங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

3. அதிவேகமாக வாகனங்களை ஓட்டாமல், நிதானமாக சாலை விதிகளை மீறாதபடி தகுந்த பாதுகாப்போடு வாகனங்களை ஓட்டுவதற்கு வேண்டிய ஞானம் உண்டாக ஜெபிப்போம்.

4. விபத்துகளினால் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவோர் சீக்கிரத்தில் குணமடைய ஜெபிப்போம்.

5. சாலைகளை சீரமைக்கவும், தலைக் கவசம் மற்றும் அரசாங்க விதிகளை கடைபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## கொலை – கடத்தல் வழக்குகள்

▸ இந்தியாவில் 2020ஆம் ஆண்டில் தினமும் சராசரியாக 80 கொலை செய்யப்பட்டுள்ளன. ஓராண்டில் மட்டும் 29 ஆயிரத்து 193 பேர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

▸ உத்திரபிரதேசத்தில் 3,779 கொலை வழக்குகளும், பீஹாரில் 3,150 வழக்குகளும், மகாராஷ்டிராவில் 2,163 வழக்குகளும், மத்திய பிரதேசத்தில் 2,101 வழக்குகளும், மேற்கு வங்கத்தில் 1,948 கொலை வழக்குகளும், டெல்லியில் 472 கொலை வழக்குகளும் பதிவாகி உள்ளன.

▸ கொலை வழக்கில் கொல்லப்பட்டவர்களில் 38.5% பேர் 30 முதல் 45 வயதுள்ளவர்கள், 35.9% பேர் 18 முதல் 30 வயதுள்ளவர்கள், 16.4% பேர் 45 முதல் 60 வயதுடையவர்கள், 4% பேர் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள்.

▸ கடந்த 2020ஆம் ஆண்டில் 84 ஆயிரத்து 805 கடத்தல் வழக்குகள் பதிவாகியுள்ளன. 2019ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 36 வழக்குகள் பதிவாகியுள்ளன.



## ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவில் நடைபெறும் கொலைகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

2. கொலை வெறியைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், கொலைகளினால் இறப்புகள் நடைபெறுவது தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

3. வாலிபர்களுக்குள் கொலை வெறியைத் தூண்டி, அவர்களின் எதிர்காலத்தை பாழாக்க நினைக்கும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

4. கொலை செய்து வழக்குகள் தொடுக்கப்பட்டு சிறைகளில் இருக்கும் ஒவ்வொருவரும் மனந் திரும்பி, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவுக்காக வாழ ஜெபிப்போம்.

5. கடத்தப்பட்டிருக்கும் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மீட்கப்படவும், இனி எந்த குழந்தைகளும் கடத்தப்படாமல் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஆன்லைன் மோசடி

▸ தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக போதிய வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தினால் படித்து முடித்த தமிழக இளைஞர்கள் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் வேலை வாய்ப்பைத் தேடி செல்கின்றனர்.

▸ அப்படி செல்லும் 50%க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஏதோ ஒரு வகையில் மோசடி கும்பலால் ஏமாற்றப்படுவது வாடிக்கையாகி விட்டது.

▸ வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் மூலமாக சம்பாதிக்கலாம் என்று ஆசை வார்த்தை கூறி இளைஞர்களை ஏமாற்றி வடமாநிலத்தை சேர்ந்த ஒரு கும்பல் பணம் பறிக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது.

▸ தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநில இளைஞர்களை குறிவைத்து வடமாநில கும்பல் ஏமாற்றி வருகிறது.

▸ கடந்த 2 வருடங்களாக இவர்களால் ஏமாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.




## ஜெபக்குறிப்புகள்

1. தமிழக இளைஞர்களுக்கு அரசாங்கம் தகுந்த வேலை வாய்ப்புகளை வழங்கி, தங்கள் சொந்த மாநிலங்களில் வேலை வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

2. இளைஞர்கள் மோசடி கும்பலால் ஏமாற்றப் படாமல் ஞானமாய் செயல்பட்டு வேலை வாய்ப்புகளை பெற ஜெபிப்போம்.

3. வடமாநிலத்தவரால் ஏமாற்றப்பட்டு, பணத்தை இழந்து தவிக்கும் இளைஞர்களுக்கு பணங்கள் திரும்ப கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

4. மோசடி கும்பல்களை காவல்துறையினரால் இனங்கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட ஜெபிப்போம்.

5. ஆசை வார்த்தைகளைக் கேட்டு ஏமாறாமல், பொறுமையாய் விசாரித்து செயல்பட வேண்டிய ஞானம் உண்டாக ஜெபிப்போம்.

# சமூக வலைத்தளங்களில் இருப்பது சரியா? தவறா? 8






டாய்லெட், பாத்ரூம் என்று எங்கும் துரத்திக் கொண்டு, சாப்பிடும் போது, பயணிக்கும் போது, வரும் போது, போகும் போது, ஏன்! கண் அயர்ந்து தூங்க வைப்பது வரை Social Media ஆக்கிரமித்துள்ளது. ஜெபிக்க நேரமில்லை என்போர் பேஸ்புக்கில் மணிக்கணக்கில் நேரம் போக்குவது தேவனை அலட்சியப்படுத்தி அவமானபடுத்துவதற்கு சமம். வேதத்தை வாசிக்காமல் வசனத்தை Status போடுவது தேவனை ஏமாற்றும் மாய்மாலம். துதிக்க நேரம் செலவிடாமல் துதிபாடலை Share செய்வது துணிகரமான பாவமாகும். எரேமியா 48:10ன் படி 'கர்த்தருக்குரிய வேலை (ஜெபம், துதி, வேத வாசிப்பு, ஊழியம்) எதுவானாலும் அசதியாய் செய்பவன் சபிக்கப்பட்டவன்' என்று வேதம் கூறுகிறது.



நாம் நீதியில் (வேதம்) முகத்தை தரிசிக் கிறோமா? இல்லை, முகபுத்தகத்தில் (FB) தரிசிக்கிறோமா? அவரது சாயலால் திருப்தியாகி றோமா? Status-ஆல் திருப்தி ஆகிறோமா? (சங். 17:15) என்று சிந்திக்க வேண்டும்.

## Social Media அவசியந்தானா?

Face Book, Whatsapp போன்றவை சில நல்ல காரணங்களுக்கு அவசியமானதாகத் தான் இருக்கிறது. நண்பர்களோடு தொடர்பு கொள்ள, நட்பை, அன்பை பகிர்ந்து கொள்ள உதவுகிறது. அநேகர் இதன்மூலம் ஊழியமும் செய்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துகின்றனர். எனவே இவைகளை சரியாக கையாள தெரிந்து கொண்டபின் பயன்படுத்துவதில் தவறில்லை.

## எங்கே எனது நேரம்?

அநேகருக்கு வாழ்க்கையே Social Media-வில் தான் ஓடுகிறது. தூங்கி எழும்போது அதில் விழிக்க ஆரம்பித்து,

## என்ன தவறு இருக்கிறது?

Social Media-வை பயன்படுத்துவதில் என்ன பாவம் வந்துவிடப் போகிறது? என்று கூறுவது புரிகிறது. வலைத்தளங்களில் நல்ல விஷயங்களைவிட, விஷத்தன்மைகளை பரப்பும் விஷமிகள் அதிகம். அவைகள் உங்கள் சிந்தனைகளை கறைப்படுத்துகிறது. தொடர்ச்சியாக உங்கள் போனை பார்த்துக் கொண்டு இருப்பதால் உங்கள் உடல்நலம் கேடு அடைகிறது. உங்கள் குடும்ப உறவுக்குள்ளும் விரிசல் ஏற்படுகிறது. வெறும் Like போடும் நண்பர்களை சந்தோஷப்படுத்த, உங்கள் அன்பிற்காக வாழும் அன்பு உள்ளங்களை இழந்து போகிறீர்கள். கணவன் மனைவியிடையே சண்டை ஏற்பட்டு, சமாதானம் குலைகிறது. பிள்ளைகள்

அன்பிற்காக ஏங்கி தவித்து, திசைமாறிப் போகின்றது. இப்படி நிறைய கூறிக்கொண்டே போகலாம். நீங்களே எதை எதை இழந்தீர்கள் என்று ஒரு List போட்டு பாருங்களேன்.

## வேதம் என்னக் கூறுகிறது?

**''...எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்... (ரோமர் 6:16).** இதில் நீங்கள் கீழ்ப்படியாவிட்டாலும், எதனால் மேற்கொள்ளப் படுகிறீர்களோ அதற்கு அடிமையாகிறீர்கள். உங்களால் தொடர்ந்து ஒருமணி நேரம் ஓய்வு கிடைக்கும்போது, Social Media பார்க்காமல் இருக்க முடிகிறதா? என்று சோதித்துப் பாருங்கள். இல்லையென்றால் நீங்கள் அடிமையாக உள்ளீர்கள் என்று அர்த்தம். ஒருநாள் முழுவதும் அழைப்புகளை (Calls) தவிர வேறு எதற்கும் Phone எடுக்காமல் இருக்க முடிகிறதென்றால் நீங்கள் அடிமைப்படவில்லை என்று பொருள். இல்லையெனில் உங்கள் ஆத்துமாவைக் குறித்து எச்சரிக்கை (ரோமர் 7:23). உங்கள் மொபைல் போனை உங்கள் குடும்பத்திலுள்ள பெரியவர்கள் யாராவது, எப்போதாவது எடுத்து பார்ப்பதற்கு உங்களால் அனுமதிக்க இயலவில்லையெனில் நீங்கள் மிகப்பெரிய பாவக் கட்டில் அகப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தூங்கி எழுந்தவுடன் (மணி பார்ப்பதை தவிர) மொபைல் பார்க்கும் பழக்கும் மிகப்பெரிய ஆபத்தை உங்கள் ஆத்துமாவிற்கு விளைவித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து தெளியுங்கள்.





தேவனது முகத்தை தேடுவதிலும், தேவனுடைய வார்த்தையை பார்ப்பதிலும் தான் நமது நாளின் துவக்கம் அமைய வேண்டும். சங். 130:6ன் படி, 'நம் ஆத்துமா ஆண்டவருக்காக காத்திருக்காவிடில் அனலுமின்றி, குளிருமின்றி, தேவன் வாந்தியெடுக்கும் நிலையில் நம் ஆவிக்குரிய வாழ்க்கை இருக்கிறது' என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## Selfieஆ? Selfishஆ?

இன்று Selfie மோகத்தில் தங்கள் உயிரையும் துச்சமாக நினைக்கும் வாலிபர், நங்கையர்கள் பெருகி விட்டனர். எப்போதாவது யாருக்காவது (குடும்பத்தினருக்கு மட்டும்) அனுப்ப வேண்டுமென்று Selfie எடுப்பது தவறல்ல. மாறாக, செல்பி எடுப்பதில் பைத்தியமாகிவிட்ட பலர் இருக்கிறார்கள். (2 தீமோ. 3:2,5) கடைசி நாட்களில் ''தற்பிரியர்'' (Selfie) பெருகுவார்கள் என வேதம் கூறுகிறது. இப்படிப்பட்டவர்கள் 'தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள்' என்று வேதம் சொல்கிறது. தேவன் தான் உங்களை ரசிக்க வேண்டும். 'மற்றவர்கள் என்னை ரசிக்க வேண்டும்' என்கிற எண்ணம் விபச்சாரத்திற்கு சமம். இப்படிப்பட்டவர்கள் சத்துரு தங்களுக்கு விரித்திருக்கும் வலையில் (Network) போய் மாட்டிக் கொண்டு, ஆபத்தை சந்திக்கிறார்கள் (பிரசங்கி 9:12). இப்படிப்பட்ட கண்ணியில் சிக்கி தவிக்கும் இளம் பெண்பிள்ளைகள் ஏராளம். அன்பு தம்பி, தங்கைகளே! கவனம். இவைகளை விட்டு விலகி ஓடு. Chatting அதிக நேரம் செய்வதும் பாவத்திற்கு வழிவகுக்கும் (2 தீமோ. 2:16).



## Social Media ஊழியம் சரியா?

அன்பரே! முதலாவது உங்கள் சொந்த குடும்பத்தில் தெய்வ பக்தியுள்ளவர் என்ற நற்சாட்சியும், வசனத்தின்படி வாழ்பவர் என்ற பெயரும் பெற்று விட்டு, பின் சமூக வலைத்தள ஊழியத்தில் இறங்க வேண்டும். ''உலகம் முழுவதும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி விட்டு, தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் இலாபம் என்ன?'' சமூக வலைத்தளத்தில் வீணான வாக்குவாதங்கள், தர்க்கங்கள், சண்டைகள், மார்க்கபேதங்கள் ஆகியவற்றை தயவு கூர்ந்து விட்டு விலகி விடுங்கள்.

**யாருக்கும் உதவுவது போன்றோ, பிசாசு துரத்துவது போன்றோ, அந்நிய பாஷையில் ஜெபிப்பதையோ பேஸ்புக்கில் போட்டு, தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதீர்கள். கூடுமானவரை மற்றவரின் அனுமதியின்றி அவர்களுடைய போட்டோவை வலைத்தளங்களில் வெளியிடாதீர்கள் Status-லும், Wall-லும், Page-லும் வசனத்தால் நிரம்பியுள்ளதா என ஒருமுறைக்கு இருமுறை சோதியுங்கள். 'நம்மை நாமே சோதித்தறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்' தேவ பக்திக்கு ஏதுவாக முயற்சி பண்ணுங்கள் (1 தீமோ. 4:7). தன்னை 'நிற்கிறவன்' என்று எண்ணுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கக் கடவன் (1 கொரி. 10:12) சிந்தித்து ஞானமாய் செயல்படுங்கள் ●**

# மௌன யுத்தம்



அதோனிபேசேக் 8

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு முன் கானான் தேசத்தை ஆண்ட கானானிய ராஜா அதோனிபேசேக் ஆவார். யோசுவா மரித்த பின் இஸ்ரவேலர் கானானியரை எதிர்த்து யுத்தம் பண்ணும்படி, யார் முதலில் புறப்பட வேண்டும்? என்று கர்த்தரிடம் கேட்கின்றனர். யூதா கோத்திரத்தார் எழுந்து புறப்படும்படி கர்த்தர் உத்தரவு கொடுக்கிறார். அந்தப்படியே யூதா எழுந்து போனபோது, கர்த்தர் கானானியரையும் பெரிசியரையும் அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். யூதா கோத்திரத்தார் மற்றும் அவர்களுக்கு யுத்தத்திற்கு துணை நின்ற சிமியோன் கோத்திரத்தாரும் சேர்ந்து பேசேக் என்னும் இடத்தில் கானானிய ராஜாவான அதோனிபேசேக்கை பிடித்து அவன் கை, கால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டார்கள். இந்த யுத்தத்தை கர்த்தரே முன்னின்று நடத்தியபடியால், அதோனிபேசேக்கின் செய்கைக்கு ஏற்ற விதமாய் கர்த்தர் சரிகட்டும், இந்த சம்பவம் நியா. 1:1–7ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதோனிபேசேக் அவரது எதிராளிகளை வென்று இருந்தபோது, அவரது மனதில் இரண்டு வித குரல்கள் கீழ்கண்டவாறு ஒலித்திருக்கலாம்.

**குரல் 1:** என்னுடைய திறமை என்ன? பெலன் என்ன? தற்போது சிறை பிடிக்கப்பட்டிருக்கும் ராஜாக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால் 70 ஆகிறதே!

**குரல் 2:** தேவ ஒத்தாசை இருந்திருக்குமோ? இத்தனை ராஜாக்களை சாதாரணமாக வென்றது, வியப்பாகத்தான் இருக்கிறது.

**குரல் 1:** இந்த ராஜாக்களுக்கு என்ன தண்டனை வழங்குவது? கொன்று விடலாமா?

**குரல் 2:** இல்லாவிட்டால் மன்னித்து விட்டு விடலாமா? ஏனென்றால் நாம் விதைப்பதை நாம் அறுத்தாக வேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

**குரல் 1:** மன்னிப்பா? சாத்தியமே இல்லை. தண்டித்தே தீருவேன்.

**குரல் 2:** ஆயுள் சிறை தண்டனை கொடுத்தால் என்ன?

**குரல் 1:** சிறை தண்டனை என்றால் சில ஆண்டுகளுக்குப் பின் ஒருவேளை தப்பிவிட்டால், என் எதிராளிகளோடு சேர்ந்து பழிவாங்க வந்து விடுவார்கள்.

**குரல் 2:** நன்றாக சிந்தித்து, என் திறமையும், ஞானமும் பல ஆண்டுகள் பல மக்களால் பேசப்படும்படியான தண்டனை வழங்க வேண்டும்.



**குரல் 1:** ஊனமாக்கி விட்டால் என்ன? விடுதலைப் பெற்றாலும் தப்பித்தே சென்றாலும் எனக்கு தீங்கு செய்ய முடியாதே.



**குரல் 2:** ஆனால் ஒரு மனிதனை ஊனப் படுத்துகிறவன் ஊனப்படுத்தப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருப்பதாக கேட்டிருக்கிறேனே ஒருவேளை நான் ஏதாவது யுத்தத்தில் தோற்றுவிட்டால், இதை போலவே எனக்கும் தண்டனை கொடுக்கப்பட்டால்...



**குரல் 1:** அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. ஒருநாளும் நடக்கவும் கூடாது. பிடிக்கப்பட்ட எனது எதிரிகளின் கை, கால் பெரு விரல்களை வெட்டி விட வேண்டும். அப்படிச் செய்வதினால் அவர்களால் அம்பு தொடுக்கவோ, விரைவாக ஓடவோ முடியாது. எனவே ஒருநாளும் போர் வீரனாக வாழ முடியாது. அவர்கள் விடுவிக்கப்பட்டாலும், தப்பியே சென்றாலும் எனக்கு ஆபத்து இருக்காது.

இவ்வாறு அதோனிபேசேக் ராஜாவின் மனதில் இரண்டு வித குரல்கள் பேசி இருக்கலாம். துர் மனச்சாட்சியின் ஆலோசனையின்படி தனது கைதிகளாக பிடிக்கப்பட்ட ராஜாக்களின் கை, கால் பெருவிரல்களைத் தறித்து அவர்களை ஊனப்படுத் தினார். அவரது மேஜையின் கீழ் விழுந்ததையே பொறுக்கித் தின்றார்கள். யூதா மற்றும் சிமியோன் கோத்திரத்தாரால் பிடிக்கப்பட்ட அதோனிபேசேக் ராஜாவின் கை, கால் பெருவிரல் தறிக்கப்பட்டு அவர் தீர்த்த தீர்ப்பின்படியே அவருக்கும் நடந்தது. **''...நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார்...''** என்று அவரது வாயே தேவனைக் குறித்து சாட்சி கூறியது (நியா. 1:7).

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிப மகனே, மகளே! நம்முடைய தேவனுக்கு 'சரிக்கட்டுகிற தேவன்' என்றும் ஒரு பெயருண்டு. **''மனுஷனுடைய செய்கைக்குத்தக்கதை அவனுக் குச் சரிக்கட்டி, அவனவன் நடக்கைக்குத்தக்கதாக**





**அவனவனுக்குப் பலனளிக்கிறார்'' (யோபு 34:11)** என்று யோபு பக்தனும் கூறுகிறார். **''கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித் தறிகிறவருமாயிருக்கிறேன்'' (எரே. 17:10)** என்று வேத வசனம் தெளிவாக கூறுகிறபடியால் உங்கள் செய்கைகள் மற்றும் சிந்தனைகள்கூட மற்றவர்களுக்கு நன்மையாய் இருக்கட்டும். 'சரிக்கட்டுகிற பொறுப்பை தேவன் தூதர்களுக்கோ, எந்தப் பரிசுத்தவான் களுக்கோ கொடாமல் அவரே முன்னின்று செய்கிற படியால் உங்கள் செய்கைகளிலெல்லாம் கவனமாய், புத்தியாய் நடந்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கும் தீமை செய்யாமல், சத்துருக்களுக்குகூட நன்மையே செய்யுங்கள் ●

**''...மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்'' (கலா. 6:7).**



# கிறிஸ்தவத்தின் சிறப்புகள்

## தேவன் தரும் உன்னத பதவி

**என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! கிறிஸ்தவத்தின் சிறப்புகள் என்று நாம் பார்த்து வரும் தொடர் கட்டுரையில், இம்மாத தலைப்பாக ''தேவன் தரும் உன்னத பதவி''** (God-Given Divine Position) **என்கிற விசேஷத்தை நாம் ஆராய்வோம். நான் முன்பே கூறியதுபோல, கிறிஸ்தவத்தில் அநேக சிறப்புகள் உண்டு. அவற்றில் ஓர் மிக முக்கியமான சிறப்பாக, இயேசுவாகிய தேவனுடைய குமாரனை தன்னுடைய சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக்கொள்பவர்களுக்கு தேவன் தரும் உன்னதமான பதவி/ ஸ்தானத்தை நாம் கூறலாம். கிறிஸ்தவத்திற்கே உரித்தான ஓர் சிறப்பாக இதைச் சொல்லலாம். அத்தகைய உன்னதமான பதவி தான் என்ன? வாருங்கள்! கீழ்க்கண்டப் பகுதிகளில் அதைக் காண்போம்.**

**''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்'' (யோவான் 1:12,13)** என்று வேதம் சொல்கிறது. மேற்கூறிய வசனத்தின் அடிப்படையில், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் தேவனாலே பிறக்கிறார்களென்றும், தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் என்றும் விளங்குகிறது.

என்ன? இதெப்படி சாத்தியம்? ஒன்றும் புரியவில்லையே? பாவம் செய்து, பாவ வாழ்க்கை வாழ்ந்து வரும் நான் எப்படி சடுதியாக தேவனுடைய பிள்ளையாக மாற முடியும்? என்கிறதான பல கேள்விகள் உங்கள் உள்ளத்தில் எழும்பலாம். என் அன்பு நண்பர்களே! இக்கேள்விகளுக்கு உண்மையாகப் பதில் கூற வேண்டுமானால், வேதம் சொல்கிறதுபோல, ''தேவனால் கூடாதக் காரியம் ஒன்றுமே இல்லை'' என்பதுதான்.



நாம் எந்த ஒரு வழிப்பாட்டு முறையையோ, விசுவாச மார்க்கத்தையோ எடுத்துக்கொண்டாலும், தேவன்–மனிதன் அல்லது தெய்வங்கள்–மனிதர்கள் அல்லது ஓர் சக்தி–மனிதர்கள் என்பதாகவே தேவனுக்கும் அல்லது தெய்வங்களுக்கும் மனிதர்களுக்குமான உறவு அடையாளப்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவத்தில் மாத்திரமே, தேவனும் அவருடைய பிள்ளைகளும் என்கிறதாய் அந்த உறவை அடையாளப்படுத்தப்படுகிறது.

சற்று சிந்தித்துப் பாருங்கள், என் அன்பு வாலிபர்களே! வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அதிலுள்ள யாவையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நாம் பிள்ளைகள் என்று அழைக்கப்படுவது எத்தகைய ஓர் பாக்கியம். மாத்திரமல்ல, அப்பாக்கியத்தை அடைய நாம் தேவக்குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக்கொள்வதேயல்லாமல் வேறெந்த காரியமும் செய்ய வேண்டியதில்லை. காரணம், இயேசு தானே எல்லாவற்றையும் சிலுவையில் நமக்காக செய்து முடித்து விட்டார்.

நாம் அவரை அப்பா என்று கூப்பிடக்கூடிய இந்த அரிதான பாக்கியம் இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு கிடைத்திருக்கிறது. ஆம் நண்பர்களே, பூமிக்குரிய அப்பா நம்மை விட்டுப்போனாலும், அல்லது நம்மைக் கைவிட்டாலும், நம்மைக் கைவிடாத என்றும் விட்டு விலகாத அப்பா நமக்கு பரலோகத்தில் என்றும் உண்டு. ஆகவே நீங்கள் திக்கற்றவர்கள் அல்ல. யாரேனும் நீங்கள் யார் என்று உங்களிடம் கேட்டால், உங்கள் உள்ளத்தில் வரவேண்டிய பதில், ''நான் தேவனுடைய பிள்ளை'' என்றே இருக்க வேண்டும் ●

# சரிகட்டுதல்...






*மனம்பதறுகிறவர்களைப் பார்த்து; நீங்கள் பயப்படாதிருங்கள். திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள் [ஏசாயா 35:4].*

*தீமைக்குச் சரிகட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை இரட்சிப்பார் [நீதி 20:22]*

*...கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிகட்டுவார் என்றான் [2 சாமுவேல் 16:12]*

*கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிகட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை [1 சாமுவேல் 24:12]*

*அவர் என் சத்துருக்களுக்கத் தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவார்,உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும் [சங்கீதம் 54:5]*

*கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார்; தம்முடைய சத்ததுருக்களிடத்தில் உக்கிரத்தைச் சரிக்கட்டி, தம்முடைய பகைஞருக்குத்தக்க பலனையும், தீவுகளுக்குத்தக்க பலனையும் சரிக்கட்டுவார் [ஏசாயா 59:18]*

*நகரத்திலிருந்து அமளியின் இரைச்சலும் தேவாலயத்திலிருந்து சத்தமும் கேட்கப்படும்; அது தமது சத்துருக்களுக்கச் சரிக்குச் சரிக்கட்டுகிற கர்த்தருடைய சத்தந்தானே [ஏசாயா 66:6]*

# இந்த ஆண்டு நடத்தி முடிக்கப்பட்ட, நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது!

● உச்சநீதிமன்றத்தில் மனு தள்ளுபடி!

● வக்கீலுக்கு ₹5 லட்சம் அபராதம்!

பல்வேறு மாநிலங்களில் ஒருநாள் முன்னதாகவே வினாத்தாள் வெளியானதால், இந்த ஆண்டு நடத்தி முடிக்கப்பட்டுள்ள நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. மேலும் அம்மனுவை தள்ளுபடி செய்து வழக்கில் ஆஜரான வக்கீலுக்கு ரூ.5 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது.

இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான நீட் நுழைவுத் தேர்வு கடந்த மாதம் 12ம் தேதி நாடு முழுவதும் நடைபெற்றது. இதில் 6 லட்சத்துக்கும் மேலான மாணவர்கள் தேர்வு எழுதினர். இந்நிலையில் வழக்கறிஞர் மம்தா சர்மா என்பவர் உச்சநீதிமன்றத்தில் பொதுநலன் மனுவை கடந்த வாரம் தாக்கல் செய்திருந்தார். அதில், 'இந்த ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் மற்றும் குளறுபடிகள் நடந்துள்ளது. ஆள்மாறாட்டம் உள்பட முன்னதாகவே வினாத்தாள் வெளியாகி உள்ளது. எனவே இவ்வாண்டு நடந்த நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்து விட்டு மீண்டும் தேர்வு நடத்த வேண்டும். மேலும் இதுதொடர்பாக சிபிஐ விசாரணைக்கும் உத்தரவிட வேண்டும்' என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இம்மனுவை உச்சநீதிமன்ற நீதிபதி நாகேஸ்வராவ் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், 'பல்வேறு குளறுபடிகளுடன் நடத்தி முடிக்கப்பட்டுள்ள முழுமையாக ரத்து செய்ய வேண்டும்' என தெரிவித்தார். ஆனால் அவரது கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், ''பல லட்சம் மாணவர்கள் இந்தத் தேர்வை நாடு முழுவதும் எழுதி உள்ளார்கள். இதுபோன்ற சூழலில் அதனை ஒட்டுமொத்தமாக ரத்து செய்தால் அவர்களை பாதிக்காதா'?.

மேலும் இதுபோன்று மனுதாக்கல் செய்தால் அபராதத்துடன் தள்ளுபடி செய்யப்படும் என உங்களை அணுகியவர்களிடம் ஏன் நீங்கள் எடுத்துரைக்கவில்லை. அது உங்களுக்கு தெரியாதா? இந்த விவகாரத்தில் 'உச்சநீதிமன்றம் முன்பு வழங்கியுள்ள தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதே'? என சரமாரி கேள்வியெழுப்பிய நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்தனர். மனுவை தாக்கல் செய்தவக்கீலுக்கு ₹5 லட்சம் விதித்த நீதிபதிகள் மனுதாரர்களிடம் இருந்து பெறக்கூடாது வழக்கறிஞர் தான் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.

## புதிய பாடத்திட்டம் மாற்ற முடியாது!

''சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவத் தேர்வுக்கான பாடத்திட்டங்கள் குறித்து உச்சநீதிமன்றத்தில், ஒன்றிய அரசு பிரமாண பத்திரம் நேற்று தாக்கல் செய்துள்ளது. அதில், 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வின் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டது என்பது எக்காரணத்தைக் கொண்டும் திரும்பப் பெறப்படாது'. புதிய பாடத்திட்டத்துக் மாணவர்கள் தயாராகும் வகையில் நவம்பர் மாதம் நடத்தப்படவிருந்த தேர்வானது ஒத்திவைக்கப்பட்டு, 2022ம் ஆண்டு ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நடத்தப்பட உள்ளது'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

– அக்டோபர் 05, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# குழந்தைகள் தினம்!

நவம்பர் மாதம் என்றாலே பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் தான் நம் நினைவுக்கு வரும். மறைந்த பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14ம் தேதி ஆண்டுதோறும் குழந்தைகள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தைகள் மீது நேரு காட்டிய அன்பை வெளிப்படுத்தும் விதமாகத்தான் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

→ குழந்தை தொழிலாளர்கள் இல்லாத ஒரு நாடாக இந்தியாவை மாற்றி, அனைத்துக் குழந்தைகளும் அடிப்படைக் கல்விப் பெற்று முழு பாதுகாப்புடன் அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும்.

→ குழந்தை பருவத்தில் கற்றுக் கொள்ளும் நல்ல விஷயங்கள் தான் அவர்களுடைய எதிர்காலத்தின் முக்கிய தேவை.

→ சிறு வயதில் குழந்தைகள் நல்ல விஷயத்தைக் கற்றுக் கொண்டால் அது பசுமரத்தாணி போல் பதிந்து விடும்.

→ குழந்தைகளை வீட்டிற்குள் பூட்டி வைக்காமல், மற்ற குழந்தைகளுடன் பழக விடுங்கள். அப்போதுதான் அவர்களுக்கிடையே சகோதரத்துவமும், உதவும் மனப்பான்மையும் வளரும்.

→ ஒவ்வொரு குழந்தைக்கும் என்ன கனவு என்பதைத் தெரிந்து கொண்டு அதனை நிறைவேற்ற பெற்றோர் முயற்சிக்க வேண்டும்.

→ குழந்தைகளின் ஆர்வத்தையும், சைகைகளையும், அணுகுமுறைகளையும் நன்றாக கவனித்து, அந்தக் குழந்தைக்கு தேவையானதை சரியான நேரத்தில் கொடுத்தால், அந்தக் குழந்தைகள் சாதனையாளராக மாறி விடுவார்கள்.

→ குழந்தைகள் வளர்ப்பு என்பது பெற்றோர்களுக்கு ஒரு சவாலான விஷயம். குழந்தைகளை சமாதானப் படுத்த பல நேரங்களில் பெற்றோர் குழந்தைகளோடு, குழந்தைகளாக மாறினால் மட்டும் தான், குழந்தைகள் நாளைய வெற்றியாளராக மாறுவார்கள் ●



**அனைத்து குழந்தைகளுக்கும் எங்களது குழந்தைகள் தின நல் வாழ்த்துக்கள்!**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-10-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.







